21ம் நூற்றாண்டை நோக்கிய
புதுப் பயணத்தில்
எம் தலைவர்
எம்.எச்.எம். அஷ்ரஃபிற்கும்
51ம் வயதாம்
இன்று

தலைவர்கள் எல்லாம்
பிறந்ததும் மடிந்ததும்
போதும் என்ற
வரலாறுகளைத்தான்
படைத்தார்கள்

ஆனால்
பிறந்த மண்ணிற்கே
எதிர்காலத்தில் ஏற்படும்
சச்சரவுகளை
மனதில் கொண்டு
இன்றே அதற்கு
தீர்வினை வழங்கிய
தலைவனே
உன் தலைமைகள்
என்ன என்று உரைப்பது

இன்று
அம்பாரையே விழாக்
கோலம் பூண்டுள்ளது
பிறந்த மண்ணிற்கே
பிறந்த நாளில்
குடி நீர் திட்டத்தில்
குடி நீர் கொடுத்து
மக்களுக்கு
செய்கின்ற சேவைகளை
என்னவென்பது தலைவனே

தாருஸ்ஸலாத்தில்
ஒரு மண்டபத்திற்கு
கல் நாட்டு விழா
ஒரு ஆராய்ச்சி நிலையம் என்று
பலதையும்
நீங்கள் பிறந்த நாளில்
பிறப்பித்த தலைவனே
என்றும் நீங்கள்
தலைவனாகவே வாழவேண்டும்

சமாதானம் என்று
மனிதர்கள் கூவித்திரியும்
காலத்தில்
சமாதானச் சின்னமமைத்து
தேசிய ஐக்கிய முன்னணி
எனும் தோணியில்
2012ம் ஆண்டினை நோக்கிய
உங்கள் பயணமும்
வெற்றிதான்

எமக்கென்று தலைமைத்துவத்தை
பழக்குவதற்காய்
ஒரு பாராளுமன்றம்
அதையும் கூட
3வது மாடியில் நிரந்தரமாய்
அமைக்க
உங்கள் திடகாத்திரமான
முடிவுக்கு
எங்களின் பல கோடி
நன்றிகளை எப்படிச்
சொல்வது

யா அல்லாஹ்
என் தலைவனின்
தலைமைத்துவத்துக்கு
ஊன்று கோல்களாய்
எங்களைப் போன்ற
போராளிகளைக்
கொண்டு
எமது போராட்டத்தில்
இன்றும் பல
வெற்றிகளைத் தந்து
எம் தலைவனின்
சாதனைகளை மேம்படுத்துவாயாக
ஆமீன்!

**Mr. A.L. Abdul Hakeem**
*Serjeant At Arms*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலைமை

இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலைமை மிகவும் பிரகாசம் பொருந்தியதாக நோக்கப்படத்தக்கது. 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதின் பின்னால் தனித்துவமான எவ்வித அரசியல் தலைமைத்துவமோ, அரசியல் இலட்சியமோ, தன்னம்பிக்கையோ, செயல்திறன் திட்டமோ இலங்கை முஸ்லிம்களிடம் காணப்படவில்லை. கடந்த கால அரசியல் வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கும்போது இலங்கை முஸ்லிம்களின் கல்வி குறைவினால் அரசியல் ஞானமிழந்து, தனித்துவமிழந்து காணப்பட்டதுடன், பொருளாதாரத் துறையிலும் பின்தள்ளப்பட்டிருந்தார்கள்.

1956ம் ஆண்டிற்குப் பிறகு இலங்கை அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டதின் விளைவாக இலங்கை முஸ்லிம்கள் இரு கூறுகளாகப் பேரினவாதிகளால் பிரிக்கப்பட்டார்கள். இரு பெரும்பான்மைக் கட்சிகளையும் ஆதரிக்கத் தொடங்கினார்கள். இந்த பேரினவாதிகளின் சூழ்ச்சியை இனம்காண முடியாமல் போனதால் அரசியல் அனாதைகளாக்கப்பட்டார்கள். 1948ம் ஆண்டு தொடக்கம் 1956ம் ஆண்டுவரை 8 முஸ்லிம் பிரதிநிதிகளில் 1994ம் ஆண்டுவரை இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்த முஸ்லிம்களில் ஒரு சில பிரதிநிதிகள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் சேவைகளால் முஸ்லிம்களின் கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம் சற்று உயர்வடைந்தன. இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக T.B. ஜாயா, சேர் ராஸிக் பரீத், பதியுதீன் மஹ்மூத், பாக்கீர் மாக்கார், டாக்டர். கலீல், ஏ.ஸி.எஸ். ஹமீத் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இலங்கையின் இனப்பிரச்சினையை ஒரு சமரச முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் மறைந்த ஜனாதிபதி J. R. ஜயவர்தனாவும், இந்தியாவின் முன்னால் பிரதமர் மறைந்த ராஜிவ்காந்தி அவர்களும் ஓர் உடன்படிக்கையைக் கைசாத்திட்டார்கள். அவ்வுடன்படிக்கையில் இலங்கை வாழ் சிறுபான்மை முஸ்லிம்களின் அரசியல் சுயநிர்ணய உரிமைகளைப்பற்றி எவ்விதக் குறிப்புகளும் கூறப்படவில்லை. இக்காலகட்டத்தில் தான் இன்றைய அமைச்சர் Al-Haj M.H.M. Ashraff அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலைமையைப் பலப்படுத்தும் நந்நோக்குடனும், விவேகத்துடனும், தூரநோக்குடனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையுடனும், இலட்சித்துடனும் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுப்பதற்குத் தன்னை அர்ப்பணித்தார்.

இதன் பயனாக 1988ம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் எனும் அரசியல் கட்சி வித்திடப்பட்டு இன்று பெருவிருட்சமாக வளர்ந்துவிட்டிருப்பதனை நாம் காண்பது கண்கூடு. இது 1994ம் ஆண்டு இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்பட்டது. கடந்த 40 வருடகாலமாகப் பேரினவாதிகளால் அனைத்துத் துறையிலும் பின்தள்ளப்பட்டிருந்த இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாறு 6 வருட கால கடும் உழைப்பால் வெற்றி கொள்ளப்பட்டது. இச்சாதனையை நிலைநாட்டிய பெருமை கட்சித் தலைவர் கௌரவ அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களையே சாரும். அன்னாருக்கு அல்லாஹுத்தாஆலா அனைத்து வளங்ளையும் அளிப்பானாக ஆமீன்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலைமை மேன்மைப்பட வேண்டுமாயின், தென்கிழக்கு மாகாணசபை ஒரு திருப்பு முனையாக அமையப்பெற வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம், சமூகவாழ்வியல், அனைத்தும் ஓர் சீரியபாதையில் வழிநடாத்தப்படவேண்டுமாயின், தென்கிழக்கு மாகாணசபை ஒரு வரப்பிரசாதமாகும். அங்கு அனைத்து மூலவளங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள், பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், விமான நிலையம், கிராமிய வீடமைப்புத் திட்டங்கள் போன்றவை ஓர் எடுத்துக்காட்டாகும். இன்று இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் அடையாளம் கண்டுகொண்ட பேரினவாத சக்திகள் போறாமைக் கண்கொண்டு, சகிக்கமுடியாமல், கடந்த காலத்தைப் போன்று இஸ்லாமிய சகோதரப்பற்றற்ற அரசியல் ஞானமற்ற, தூரநோக்கற்ற சில அரசியல் வியாபாரிகளின் நயவஞ்சகத் தனத்தால் பேரினவாதிகளின் மாய வலையில் வீழ்ந்து, அவர்களது கையாட்களாக மாறி பாமர மக்களை தங்களது பொய்ப் பிரச்சாரத்தின் மூலம் குழப்பத்தையும் விரோதத்தையும் பிளவுகளையும் உண்டுபண்ணுவதற்கும் களம் இறங்கியுள்ளார்கள்.

அவர்களின் பார்வைகள் எல்லாம் கானல் நீருக்கு ஒப்பானதாகும். பெருவிருட்சத்தின் சுகந்தமான தென்றலைத் தங்களது கரத்தால் தடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பது விவேகமற்ற செயலாகும். இன்று விருட்சத்தின் சக்திமிக்க வேர்கள், ஐக்கிய இலங்கையின் அனைத்து மக்களுக்கும் சாந்தியையும் சமாதானத்தையும் தோற்றுவிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அந்த பெறுமதிமிக்க இலட்சியச் சிகரத்தின் உச்சியையடைய இலங்கையில் உள்ள ஒவ்வொரு முஸ்லிம் சகோதரர்களும் சிங்கள, தமிழ் சகோதரர்களோடு பரஸ்பர உறவுகளை வளர்ப்பதின் மூலமும் இன, மொழி பேதங்களைக் களைவதின் மூலமாக அவர்களுடன் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கையின் தேசிய ஐக்கியத்திற்காக வேண்டி, சிறந்த தலைமைத்துவத்தைத் தேர்ந்தெடுத்து அங்கீகரிப்பதன் மூலம் உங்களது சக்திற்கு உட்பட்ட எல்லா உதவிகளையும் செய்து, வழி நடாத்துபவரின் கரங்களைப் பலபடுத்துவதைக் கொண்டுதான் இலங்கை முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலைமையை மிகவும் பிரகாசம் பொருந்தியதாக ஆக்கலாம்.

இச்சிறிய அரசியல் ஆய்வுக் கட்டுரையை வாசிக்கும் சகோதரர்கள் தூரநோக்குடனும் தெளிவான சிந்தனையுடனும் பார்க்கும்போது, இதில் பொதிந்துள்ள உண்மையை உணர்ந்து கொள்வீர்கள். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு எழுதப்படும்போது வழிநடாத்துபவராகிய அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ர∴ப் எனும் மைந்தனின் நாமம் பொன்னெழுத்துக்களால் மூன்றெழுத்துடன் தேசிய ஐக்கியத்தில் வியாபித்திருக்கும்.

எல்லாப் புகழும் அல்லாஹு"வுக்கே

**Hon. M. M. M. Nazeem; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிகளில் காணும் அந்த நாள்



விதையொன்று போட்டு
முளையொன்று வந்தால்
விதைத்தவனுக்கே
அதன் பயன்.
விதையொன்று விதைத்தார்
செம்மல் அஷ்ர..ப்.
அகிலமே அனுபவிக்குது
அதன் பயனை

அணுவிலும் சிறிதாய்
முளைத்து அன்று
ஆலம் விருட்சமாய்
அகிலம் முழுதும்
நிழல் பரப்புது
அந்த விதையின்று.
அதுவே காங்கிரஸ் எனும்
விருட்சம் !

இருந்தும் இல்லாத
உரிமைகளை
சமூகத்துக்கு
உரித்தாக்கிட
உதயமானதே காங்கிரஸ்.

செம்மல் அஷ்ர..பின் வியர்வை
விருட்சம் வித்திட
நீரானது !
அவரின் உழைப்பில்
உயர்ந்து

எம்மையும் உயர்த்தி
நெஞ்சு நிமிர்த்தி
நிற்கவைத்தது
இந்த விருட்சம்.

அரியாசனம் கிடைக்காத போதும்
சரியாசனம் தந்து
அருகே அமர வைத்து
சரிசமமாய் மதித்திட
வழிகாட்டியது காங்கிரஸ்
வழிநடத்தியது
அண்ணல் அஷ்ர..ப்.

நாளைய பொழுது
நமக்கென விடியும் - அது
சரித்திரத்தையும் மாற்றும் -
சரியாசனம் கிடைக்க
வழிகாட்டியவரே
அரியாசனத்தில் அமர
வழி பிறக்கும்
அந்த நாளை
நம் விழிகளும் காணும்.

**Hon. M.H.M. Niyas**
Prime Minister -
Plan Implementation and Defence



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவப் பாசறை



இறைவனைத் துதித்துவிட்டு, எனது பேனாவை உசுப்பிப் பார்க்கிறேன்; உள்ளங்களில் இருந்து வெளியாகும் அருமையான உணர்வுகளை விடவும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருப்பது 21ம் நூற்றாண்டின் நாயகர்களான வாலிப நெஞ்சங்களைத் தாங்கிய தாருஸ்ஸலாம் மாதிரிப் பாராளுமன்றத்தின் இரண்டாவது படைப்பான இம்மலர் வெளியீட்டினையொட்டித்தான்.

இப்பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், இற்றை வரைக்கும் பல்வேறுபட்ட துறைகளில் பல்வகையான தலைமைத்துவப் பண்புகளை இதன் மூலம் கற்றுத் தேர்ந்த சமூக, காலாச்சார, இலக்கியத் தலைவர்கள் பலருள்ளனர். இவர்களின் அனுபவப் பாசறையாக இப்பாராளுமன்றமே திகழ்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

ஒரு மனிதனின் இலட்சியம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், அத்துறையில் தன்னிடமுள்ள அறிவைச் சிறந்த பயிற்சியினூடு மேற்கொள்ளும்போதுதான் அது சாத்தியமாகின்றது. இப்பேற்பட்ட வசதிகளையும், வாய்ப்புக்களையும் நாம் பெற்றுக்கொண்டமை பெரும் பேறு என்றுதான் கூற வேண்டும்.

இப்பாராளுமன்றம் சாதி, இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று, சகல மத மக்களையும் மூவின மொழிகளையும் சரிநிகராகக் கொண்டு நடாத்தப்படுவதுதான் இதில் உள்ள தனிச் சிறப்பம்சமாகும்.

தலைமைத்துவ இரகசியத்தை நாடிச் செல்லும் இப்பாராளுமன்றத்தின் இலக்கு, சமகாலத்தில் பெறும் வெற்றிகளைப் போல், பன்மடங்காக எதிர்காலத்திலும் கிடைக்கப்பெறும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

எமது பாராளுமன்றம் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் மிளிர்வதற்கு எமது பாராளுமன்ற பிரதம மந்திரி Hon. M.H.M. Niyas அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முதலாமவர் எனலாம். அத்தோடு, பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமங்களுக்கு மத்தியில் எமது பாராளுமன்றத்தால் வெளியிட்டு வைக்கப்பட்ட இரு மலர்களையும் தனது சொந்தக் கடமையாக எண்ணி முடித்த பெருமையினைப் பெற்ற இவர்களை, நாம் பிரதம மந்திரியாகக் கொண்டது எமது அதிஷ்டம் என்றுதான் கூறவேண்டும்.

நாளைய விடிவைத் தேடி ஓடிக்கொண்டிருக்கும் தாருஸ்ஸலாம் மாதிரிப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எமக்கு அன்னையாகவும், தந்தையாகவும், குருவாகவும் இருந்து பண்பாட்டினை, பழக்க வழக்கத்தினைக் கற்றுத்தந்து கொண்டிருக்கும் தாருஸ்ஸலாம் மாதிரிப் பாராளுமன்ற ஜனாதிபதி மேன்மைமிகு அல்-ஹாஜ் M. H. M. Ashraff அவர்கள், எமது பாராளுமன்றத்திற்கென தனியான ஒரு கட்டிடமொன்றை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கட்டிடம் முழுமை பெற எல்லாம் வல்ல இறைவன் அருள்பாளிப்பானாக!

**Mr. M.H. Musthak Mohamed**

*Asst. Secretary General & Editor of Hansard*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாருஸ்ஸலாம்



தாருஸ்ஸலாம் என்னும் தலைமைப் பீடம்
சமாதானத்தை நாடும் கருணை இல்லம்
சாதி மத பேதமின்றி கூடிடுவோம்
சகலரும் ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்.

ஒற்றுமை உயர்ச்சியை நாடிடுவோம்
சாந்தி இல்லத்தில் ஒன்று கூடிடுவோம்
சமாதானத்தை இறைவனிடம் சாட்டிடுவோம்
அனைவரும் ஒன்று கூடியே கேட்டிடுவோம்.

முஸ்லிம்களின் உரிமை கோரும் உயர் பீடம்
முஸ்லிம் காங்கிரசின் முதற்பீடம்
அல்லாஹ் அருளிய சாந்தியில்லம்
தலைவர் அஷ்ர∴பின் முயற்சியில் அமைந்த
தாருஸ்ஸலாம் எனும் அழகிய கோபுரம்.

இதனை மேலும் வளர்க்க முயற்சிப்போம்
எம் பிரச்சினைகளைத் தீர்க்க முடிவெடுப்போம்
நம் நாட்டின் விதியை மாற்றிடுவோம்
நலமாய் வாழ வழி வகுப்போம்.

**Hon. AL-Haj A. M. Saleemudeen; MDP**
*Minister of Agriculture, Land and Environment*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# යුගයේ සැබෑ ජාතික අවශ්‍යතාවය



මා මෙම ලිපිය සම්පාදනය කරන මේ අවධිය ක්‍රම ක්‍රමයෙන් ඉතිහාසයේ අන් කවර දාකටත් වඩා අප ආදරණීය මාතෘ භූමිය වූ ශ්‍රී ලංකා දේශයට සාමය සහ සමගිය අවශ්‍ය වී තිබේ. කෙලවරක් නැති ජනවාර්ගික අවිශ්වාසය, ආත්මාර්ථකාමීත්වය, දුශ්චරිතවත් මානසිකත්වය ආදි පිළිකා මූලයන් මගින් අප ශ්‍රීලංකීය ජාතික දේහය ඉතා ප්‍රචණ්ඩ ලෙසත් අභාග්‍ය සම්පන්න ලෙසත් රෝගී කර මරණීය මාවතකට තල්ලුකර ඇත .

මා ඉහතින් සනිටුහන් කරන ලද ශෝචනීය තත්ත්වයකට හේතුන් කුමක් වුවත් ඒවා සඳහා පිලියම් සොයා යලි මෙරට ශ්‍රීලංකීය ජාතික දේහය ප්‍රාණවත් කිරීම හෙවත් අපගේ ආදරණීය මවු බිමට යලිත් සාමය සහ සමාදානය අත්පත් කර දීමේ උදාර අරමුණින් යුතුව බිහි කල "සාම මන්දිරය" නමැති බිළිඳුනට, මෙම ඔක්තෝබර් 23දාට සිය ප්‍රථම උපන් දිනය එලඹේ. එය මෙවන් වකවානුවක අප රටට ඉතා වැදගත් සිදුවීමක් බව සඳහන් කල යුතු අතරම එහි කටයුතු සාර්ථකව සහ එහි අවංක අරමුණ මෙරට සාමය සහ සමගිය උදෙසා මෙහෙයවීමට දුර දර්ශී නායකත්වයට හා සාමාජිකත්වයට සුභාසිංශනය කිරීමටද උදෙක් මම ඉතා සතුටින් ඉදිරි පත් වෙමි.

වර්ථමානයේ, අප රටේ සාමය සහ සමගිය උදෙසා මෙරට බහුතර ජන කොටස වන සිංහල ජනතාව සමඟ මුස්ලිම් ජනතාව යාකිරීමේ මෙහෙවරට අෂ්රොෆ් ඇමතිතුමා ප්‍රධාන සාමාජිකත්වය සුවිශාල මෙහෙයක් ඉටුකර මින් සිටි. එපමණක් නොව සාම මන්දිරය තුල මෙරට දමිල සොහොයුරන්ද සිංහල සහ මුස්ලිම් ජනවර්ග හා එක් කොට තිබේ. මෙකල පමණක් නොව අතීත කෝට්ටේ යුගයේ පටන්ම මෙරට මුස්ලිම් ජනයා සිංහල ජනතාව හා එක්ව මෙරට සාමය, සමගිය පමණක් නොව ස්වයීර් භාවය උදෙසාද උරෙනුර ගැටී විදේශීය පෘතුගීසි, ලන්දේශී ආදි ආක්‍රමිනිකයන්ට එරෙහිව වීරෝධාර ලෙස සටන් වැදුණු සැටි ඉතිහාසය විසින් අපට සැකවින් පසක් කර දෙයි. එනම් ශත වර්ෂ ගණනාවක් තිස්සේ අප මාතෘ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

භූමියේ සාධනය උදෙසා මෙරට මුස්ලිමුන් හා ඔවුන්ගේ දූ දරුවන් සිංහල ජනතාව හා කිසිදු භේදයකින් තොරව කට යුතු කර ඇත.

මෙවන් පසුබිමක පවතින මෙම ද්වි ජන වර්ග අතර ඇති සමඟිය සහ සමාදානය අප දිවි හිමියෙන් ආරක්ෂා කර ගතයුතු අතර එය අනාගත පරපුරටද උරුමකර දිය යතු වේ. ඒ සඳහා 'සාම මන්දිරය' මූලික වී කට යුතු කරාවි යන්න මගේ විශ්වාසයයි. පමණක් නොව සිංහල සහ මුස්ලිම් ජන වර්ග අතර ඇති සාමයට සහ සමාදානයට අප අපගේ දමිල සහෝදර ජනතාවද උදෙත්ම එක් කර ගත යුතුව ඇත" එසේ කොට ශක්තිමත් සමෘද්ධිමත් ඒකීය ශ්‍රීලාංකීය ජාතික දේහයක් බිහි කල යුතුව ඇත . මා විශ්වාස කරන අන්දමට යුගයේ සැබෑ ජාතික අවශ්‍යතාවය ද එයයි.

**Hon. K.R.C.J.K. Kandegama; MDP**

*Minister of Foreign Affairs & Tourism*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MEMBER OF DHARUSSALAM MODEL PARLIAMENT

HON. AZEEZ M.A.M.
HON. ARIFF M.S.M.
HON. ASHAD THUSAD A.
HON. ASLAM M.M.M.
HON. ASKER M.H.M.
HON. ASHROFF ALI R.F.
HON. AMEEN M.H.A.
HON. AROOS H.M.M.
HON. ANVER U.T.M.
HON. AMEER I.L.
HON. AMATH A.F.
HON. AROON M.T.
HON. ALI MOHIDEEN A.
HON. ANVER M.I.M.
HON. ANZAR M.I.
HON. ADAM M.M.
HON. ASHROFF A.L.M.
HON. ABDUL RAHMAN
HON. ALI M.H.M.
HON. AMIR AJMIR M.C.
HON. ANVER A.
HON. AZOOR T.K.
HON. AMEEN U.L.M.
HON. ANVER M.I.M.
HON. ANVERDEEN I.
HON. ABITHU A.S.
HON. BADURDEEN M.A.S.M.
HON. BADURUL MMUNEER
HON. BHADURDEEN M.A.S.M.
HON. CADER S.M.A.
HON. CASSIM M.C.M.A.
HON. FAIZ S.A.M.
HON. FAWMY M.J.M.
HON. FAWZIKEEN Z.A.M.
HON. FOUS Y.L.M.
HON. FAROOK T.L.M.
HON. FAIIZE A.C.M.
HON. FAUZUL AMEER M.J.M.
HON. FAIZ M.A.M.
MR. FAROOK K.
HON. FAIZ A.M.
HON. FOUZUL OMER M.J.M.
HON. FARHAN N.P.M.
HON. FOUZUL AKRAM M.N.
HON. FOUZER M.
HON. GAZZALY A.H.M.
HON. GOUS A.H.M.
HON. GUNASEKARA J.R.
HON. GUNAPALA N.P.M.
HON. HAREED M.M.A.
MR. HAKEEM A.L.A.
MR. HANIFA M.M.
HON. HAROON M.I.
HON. HASSAN F.M.
HON. HAMEED B.B.
HON. HAKEEM S.A.M.
HON. HAI H.A.M.
HON. HUZRI M.M.
HON. HAMEED M.M.A.
HON. HUSSAIN V.
HON. HIYAS M.H.
HON. HILMY M.Y.M.
HON. HITHAYATHULLA K.L.M.
HON. IMRAN HUSSAIN A.S.
HON. IBRAHIM M.B.M.
HON. IRFAN MOULANA S.A.M.
HON. INUNDEEN M.Z.M.
HON. IRSHAM M.U.M.
HON. ISMATH T.S.
HON. IMTHIYAS J.A.M.
HON. IFTHIKAR M.H.M.
HON. IQBAL S.H.M.
HON. ILYAS (MOULAVI) H.M.M.
HON. IBRAHIM M.B.M.
HON. IQBAL M.J.M.
HON. JIFREY M.H.M.
HON. JANAHIR S.A.M.
HON. JUNAIDEEN V.
HON. JOWFER S.M.M.A.
HON. JAINULABDEEN M.S.M.
HON. JIFFRY A.L.M.
HON. JISMY M.R.M.
HON. JAMEEL C.M.
HON. JOUFER M.Y.M.
HON. JUNAID V.
HON. JUNAIDEEN A.C.M.
HON. JALEEL S.M.
HON. JANAKA S.M.G.C.
HON. JAZEEL A.M.
HON. JOUFER M.M.
HON. JAFEER M.P.M.
HON. KANDEGAMA K.R.C.J.K.
HON. KHALID Z.
HON. KALEELUR RAHMAN A.C.M.
HON. KAMARDEEN K.L.
HON. KADER M.A.
HON. KHALDEEN K.M.H.
HON. KULARATHNE B.R.
HON. KISMATH A.M.M.
HON. KAMAL MOHD. S.H.
HON. KOWTHAR ALI
HON. LAFEER A.R.A.M.
HON. LAXMAN M.D.
HON. LATHEEF A.M.A.
HON. MASHOOR MOULANA S.Z.M.
HON. MAZOOTH B.M.
HON. MUSATHEEK A.C.M.
MR. MUSTHAK MOHD. M.A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# MEMBER OF DHARUSSALAM MODEL PARLIAMENT

HON. MOHIDEEN S.U.K.
HON. MOHIDEEN J.B.
HON. MEELATH KEERAN M.K.
HON. MANZOOR M.H.A.
HON. MUSHTHAK M.A.M.
HON. MUMTHAS M.A.M.
HON. MUZAMMIL A.R.D.
HON. MAHROOF K.M.M.
HON. MAWZOON A.R.M.
HON. MUAZMI M.B.M.
HON. MUSTHAQUE M.I.M.
HON. MAJEED ALI
HON. MAZAHIR M.Z.M.
HON. MURADATHULLA A.S.
HON. MOHIDEEN M.I.M.
HON. MOHAMED M.F.
HON. MOULANA S.A.M.I.
HON. MUBEEN M.A.M.
HON. MOHAMED Z.M.
HON. MAJEED A.L.A.
HON. MALHARDEEN M.T.
HON. MUNEER M.I.M.
HON. MOHAMED A.C.P.
HON. MOHAMED M.B.
HON. MANA MACKEEN
HON. NIYAS M..H.M.
HON. NIYASDEEN B.
HON. NILAM A.J.M.
HON. NAWSAR M.H.M.
HON. NAWASDEEN A.G.
HON. NOORULLAH V.
HON. NAYEEM M.R.H.
HON. NAINA MOHD. M.I.
HON. NAUSHAD A.
HON. NAFEEN M.I.M.
MR. NIBAS S.I.
HON. NALEEF S.H.M.
HON. NIJAMUDEEN M.
HON. NAWZAD ABO.
HON. NUHUMAN N.P.M.
HON. NAIMULLAH M.
HON. NIYAS M.C.M.
HON. NAJEEM M.K.M.
HON. NOORULLAH H.M.
HON. NIHMATH S.H.
HON. NUFAIL M.I.L.
HON. NIYAS M.I.M.
HON. NAZAR M.N.K.A.
HON. NAFEES M.H.M.
HON. OSMAN M.A.M.
HON. PRADHEEPAN R.A.
HON. RAHIMDEEN Z.A.
HON. RIYSA MOHD. M.H.
HON. RAHMAN A.P.A.
HON. RANASINGHE P.S.
HON. RICAS M.S.M.
HON. RAZAK N.A.
HON. RIYAS M.A.M.
HON. RAUFF M.S.
HON. RISVY D.K.M.
MR. RANOOS K.M.
HON. RAMZAN R.S.M.
HON. RAZEED M.H.A.
HON. RAHEEM A.L.A.
HON. RAFI M.R.M.
HON. RIZAN M.S.M.
HON. RAFEEK I.M.
HON. RISMY MOHIDEEN M.M.
HON. RIFAI M.I.M.
HON. RINOOS M.J.M.
HON. RIYAS ADAM A.L.
HON. SAHUFAN B.M.
HON. SAFEER M.A.C.M.
HON. SAMAHUN T.N.
HON. SALIMUDEEN A.M.
HON. SIMSAR M.J.M.
HON. SABOOR MARIKKAR
HON. SAHABDEEN A.L.
HON. SIDDIK M.T.M.
HON. SAHEEN S.M.
HON. SARRAF MASHOOR
HON. SARDEEN T.M.
HON. SIYAM M.A.C.K.
HON. SAMZUDEEN A.M.
HON. SALITH A.L.M.
HON. SAHFAN S.M.
HON. SULFIKKAR M.M.M.
HON. SAMEEN M.M.M.
HON. SHAMIL ANAM M.R.M.
HON. SAJAHAN M.I.
HON. SIBLY A.M.A.S.
HON. SAFAQ A.M.
HON. SENAWIRATHNA R.M.A.W.
HON. THARIK S.M.
HON. THOUFEEK M.I.
HON. THASNEEM A.P.
HON. UDUMAN A.M.S.
HON. UKKAS J.M.
HON. WASEER M.S.M.
HON. UDUMAN LEBBE D.R.
HON. YOGANAGAM T.
HON. YAGOOB M.Y.M.
HON. YOOSUFF A.R.M.
HON. ZARZAM KHALID
HON. ZIYAAD A.H.M.
ZUBAIR M.I.M.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சி



எங்கும் ஒரே மகிழ்ச்சி, யாசகம் கேட்போர்கள் எவரும் இல்லை; சகலரும் வசதி படைத்து விட்டனர். குண்டு பொழியும் விமானங்கள் ஆகாயம் எங்கும் சுற்றி திரிகின்றன. அந்த விமானங்களிலிருந்து மலர்கள் தூவப்படுகின்றன. வெண் புறாக்கள் எங்கும் பறந்த வண்ணம் இருக்கின்றன. சகல வழிபாட்டுத் தளங்களிலும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தொலைவில் தக்பீர் ஓசை கேட்டவண்ணம் இருந்தது யார் வருகிறார்?

மேலே குறிப்பிட்டுள்ளவை வெறும் கற்பனையே ஆனாலும், கூடிய சீக்கிரத்தில் இலங்கை மண்ணில் நடைபெறப் போகிறது. ஆம் எமது முஸ்லிம்களின் அரசியல் பற்றியும், வளர்ச்சி பற்றியும் ஆராய்வது என்றால் நாம் சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பதுடன், எதிர்கால நடவடிக்கைகளுக்கு கடந்த காலக் குறைகளை நிவர்த்தி செய்து வீர நடை போடலாம்.

இன்று வடக்கு, கிழக்கில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்த ஆறை உருவாக்கிய தமிழ், சிங்கள தலைமைத்துவம் சரியான வழியில் அரசியலை நடத்தத் தவறியதே மூல காரணம். இளைஞர்களை புரட்சி எனும் உணர்ச்சியை ஊட்டி வளர்த்த தலைவன், கடைசி நேரத்தில் சுகபோகத்துக்கும், பணத்துக்கும் ஆசைப்பட்டு தன் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் நேரத்திலே இந்த ஆயுதப் போராட்டம் தோன்றியது. சரியான அரசியல் வளர்ச்சியும், சரியான தலைமைத்துவமும் எங்கு இல்லாமல் போகிறதோ அங்கு ஆயுதப் போராட்டம் உருவாகும்.

இக்கால கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ், அரசியல் எனும் பரந்த தரையில் மரச் சின்னத்தின் மூலம் உருவாகியது. இக்கால கட்டத்தில் எமது தேசிய தலைவர் கௌரவ எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் தலைமைத்துவம் எமக்கு கிடைக்காமல் இருந்தால் எமது இளைஞர்களும் ஆயுதக் கலாசாரத்தில் இறங்கி இருப்பர். இவைகளைத் தடுத்த பெருமை முஸ்லிம் காங்கிரஸுக்கு என்றும் உண்டு என ஆணித்தரமாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியினைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் சில அரசியல்வாதிகள் முஸ்லிம் காங்கிரஸை இனவாதம், சுயநலம், குழப்பவாதிகள் என்று பல கோணத்தில் கறுப்புக் கண்ணாடி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார்கள். எமது முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானீர் ரஹீம்" என்று முதற் படியை ஆரம்பித்தது. உண்மையான அரசியல்வாதிகளை அல்லாஹ்வும் கைவிடமாட்டான். கடைசியில் இனவாதம் கக்கிய அரசியல்வாதிகளின் நாவினால் முஸ்லிம் காங்கிரஸ் இனவாத கட்சி அல்ல, இந்த நாட்டில் முஸ்லிம் காங்கிரஸினால்தான் சமாதானத்தை உருவாக்க முடியும் என்று பகிரங்கமாகப் பேசியதை யாவரும் அறிவீர்கள். மேலும் முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியின் முக்கிய பங்கு இலங்கைத் தீவின் தலை எழுத்தை மாற்றக்கூடிய சக்தியும் எமது தேசிய தலைவரின் அரசியலில்தான் இருக்கின்றது என்பதுமாகும்.

மேலும், இலங்கை நாட்டின் சமாதானத்துக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்றும் உழைத்து கொண்டிருக்கிறது. எமது தேசியத் தலைவரின் முயற்சியால் வெண்புறாச் சின்னத்தைக் கொண்ட "தேசிய ஐக்கிய முன்னணி" எனும் அரசியல் கட்சி உதயமாகியுள்ளது.

இன்று வீரவிதான போன்ற அமைப்புக்கள் கக்கித் திரியும் இனவாதத்துக்குச் சவாலாக எமது "தேசிய ஐக்கிய முன்னணி" உருப்பெற்று இருக்கின்றது. இவற்றையெல்லாம் முறியடித்து சகல இனத்தவரையும் அரவணைப்பதே எமது தலைவரின் குறிக்கோள் ஆகும்.

எமது முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கு வடக்கு, கிழக்கு போன்ற இடங்களில் மாத்திரமன்றி, ஏனைய பிரதேசங்களிலும் வளர்ச்சி பெற்றுள்ளது எனத் துணிந்து கூறலாம்.

எமது முஸ்லிம் காங்கிரஸ், தான் நடந்து வந்த பாதையை என்றும் மறந்ததில்லை.

இதோ அந்த ஒலிபெருக்கியின் அறிவித்தல் இந்நாட்டின் சமாதானப் புறாவின் தந்தை கௌரவ அல்-ஹாஜ் **M. H. M. Ashraff** அவர்கள் இந்த மேடையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்; எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த மா மனிதன் இதோ வருகிறார். வந்தது வேறு யாருமல்ல எமது தேசத்தின் தலைவரே. (மேற்குறிப்பட்டவை)

2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 திகதி நிகழ்வின் ஒரு ஒத்திகை.

**Hon. A.R.S. Ramzan; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Model Parliament

In the name of Allah, the most benificient and the most merciful

In my respective, Dharussalam Model Parliament ethnic conflict.

It gives me a great pleasure in contributing an article respective, Dharussalam Model Parliament and ethnic conflict in this Sovenier.

On this rare grace occassion, which has been celebrating 2nd anniversary.

Dharussalam Model Parliament is one of the leading democratic institutions in the heart of Colombo City which has been established by Hon. Minister Mr. M. H. M. Ashraff.

When we comparatively look at our own Model Parliment and National Parliment we fine glaring differences on many instances. There is consensus with regard to pivotal issues, such as the ethnic crisis, constitution change, minority protection etc., in the National Parliament on the other hand, at though we have our differences, there is always room for compromise and amicable settlement on matters. We discuss in our Dharussalam Model Parliment.

One of the main objectives our, Dharussalam Model Parliment focus to develop the debating and leadership of its members democracy in the back bone of any civil society.

When we look at the history of the world, we have come across dictators and authoritarian like Hitler, Muslin and recent years Slabordon Milosevic many of them have been able successfully sustain and promote their regime of terror due to lack of support and Co-operation from their follow citizen.

We have also had the fore most of having among us in this century people is the caliber of Mahathma Gandhi, Martin Luther King, Nelson Mandela who have been revered and much respected for their deep commitment to human valves.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The burning issue that confront us to day is the ethnic crisis. We should analyse the beginning root cause for this crisis. This began with the taking of the citizen from the estate Tamils immediately after the we received independence from the British imperialism. No satisfactory arrangement were made to redress the grievance of those estate workers who contributed alion share fore our economy they become orphans and homeless in the country of their choice. It was during the premiership of Mrs. Srimavo Bandaranaike part of their woes and problem was settled by signing of Srima Shasthri pact in 1964.

Except, for the left oriented parties the main political parties didn't express their solidarity with the innocent estate workers their in 1958 with the enacted of the Sinhala only act, the ethnic crisis took a major turn. Several Tamils were killed their properties looted and burnt by the terrorising mobs incited by racist politicians the Tamils felt that they were marginalised and deprived of their basic human rights.

The Banda – Chelva pact in 1958 was thwarted by short sighed politicians who staged sathyagraha with the support of Buddhist Monks then again in 1966 the, Dudely – Chelva pact was sabortaged by then opposition who raised communal slogans.

The 1972 constitution didn't bring any relief or any peaceful resolution to their grievance the federal party openly protested by tearing constitution, subsequently their key leaders like Mr. Amirthalingam, Siva Sithamparam, Naganathan were arrested and detained the trail at bar that followed and their release were then apart of the history.

The F. P. Having realised their problem would remain unresolved pledged at the Vaddukaddai resolution. In 1976, to realise a separate state Tamil Eelam, this promoted and provoked the youth like Prabakaran, Uma maheswaran and Maha othaya to firm a militant groups, they had implicit faith in armed struggle rather than achieving it through a democratic process.

The collective violence in 1983 contributed in large scale to internationalize on ethnic crisis later. In 1987 J. R. J. with Rajive brought together all the conflicting parties, throught together the India – Lanka accord this didn't received enough support even with in the ruling party.
Privately, the then, Prime Minister and Minister of National Defence refused to extend their support, although they did vote $13^{th}$ amendment in parliament.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This is due to the necessity of collective responsibility of the cabinet ministers, if they refused to support this bill in the parliament they would have had to leave Government there was no sincerity of purpose in them their conscience did not support 13th amendment. The provincial council system which came through this accord, didn't have devolution of power.

The chief militant group the LTTE broke away with the accord, and the IPKF was brought in to bring them falling line with this accord this didn't succeed. Several thousand precious lives lost in the meaningless war. Sri Lanka became nation of Windows, orphans, displaced refugees, it is a pity that people became refugees in their own country.

Several peace discussions were held with the LTTE both during Premadasa and Chandrika regime. No consensus has been reached between the LTTE and successive government so far, it has been a total failure. In 1997, a devolution political package has been introduced. After a parliamentary select committee deliberation unfortunately, this has still not been presented in the parliament. As this main opposition party is not prepared to give its support to pass its with a 2/3 majority.

We are in the threshold of a new millennium which will down in a couple of month time. We have rationally to approach this issue and persuade both the Government and opposition to come to a common consensus on issue.

Our Dharussalam Model Parliament has a bounden duty to collectively to urge the Government the opposition to meaning fully settle differences and present proposals which should address grievances not only the Tamils but also other communities like Muslims and at the time satisfying aspirations of the majority.

If we fail to do so, the new millennium will bring despair and bleak future will cards for the Sri Lanka.

**Hon. A.R.D. Muzammil; MDP**

*Leader of the Opposition*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தின் போராளிகள் நாங்கள்



அரசியலில்
எமக்கு இருந்த
உரிமைகள் என்னவென்று
நாமே
புரிய முடியாத காலத்தில்
சமூகத்தின் உரிமைகளை
வென்றெடுக்க
தனி மனிதனாய்ப் புறப்பட்ட
எம்.எச்.எம். அஷ்ரஃப்
எனும் மனிதன்,
கட்சி என்று
ஸ்ரீ.ல.மு. காங்கிரஸை அமைத்து
எமக்கெல்லாம்
சுதந்திரமாய்

வாழ வழியமைத்த
தலைவனுக்கு
எத்தனை கோடி
வார்த்தைகளால் நன்றி
கூறுவது என்றுதான்
புரியவில்லை.

சமத்துவத்தையும்
பாதுகாப்பையும்
ஏழைகளை அணைத்து
அவர்களின் வாழ்க்கையில்
புகுவிடமமைத்த
தலைவனே
உன் பிறந்த நாளில்
எமக்கும் பிறக்கிறது
உறவும் உணர்ச்சியும்
எமது போராட்டமும்
வெல்லட்டும்
எமது போராளிகள்
நாங்கள் என்கிறோம்
இன்று

**Hon. M.H.M. Asker; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாருஸ்ஸலாம் பாராளுமன்றம் - ஒரு நோக்கு

சந்தர்பத்தைத் தந்த அல்லாஹு"க்கு நன்றியுடைவனாக நம்மில் அனேகமானோர் கூச்ச சுபாவம் உடையவர்கள். அதனால் எமது சிந்தனைகள் சிறகுடைந்து விடுகின்றன. ஊமை கண்ட கனவாக எமது நல்ல எண்ணங்கள் கருவுக்குள்ளே இறந்துவிடுகின்றன.

தூர சிந்தனையுடைய முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் மனதில் உதித்த மலர் இன்று தாருஸ்ஸலாம் மாதிரிப் பாராளுமன்றமாக மணம் வீசிக் கொண்டிருக்கின்றது.

பேச்சாற்றலை வளர்த்தல், தலைமைத்துவப் பயிற்சிகள் விடயத்தை அணுகும் முறை, கருத்துப் பரிமாறல்கள், தெளிவான சிந்தனையை ஏற்படுத்தல், ஒரு விடயத்தில் பூரண ஆற்றலை ஏற்படுத்தல் இதுவே தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் சிந்தனையாகும். அதை அமுல் படுத்தவே தாருஸ்ஸலாம் மாதிரி பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது என்றால் மிகையாகாது.

தாருஸ்ஸலாம் பாராளுமன்றம் இப்போது எட்டு வயதைத் தாண்டிவிட்டது. 1991ம் ஆண்டு ஜுன் 19ம் திகதி புதன் மாலை 8 மணிக்கு பாராளுமன்றத்தின் நோக்கம், செயற்பாடு, நடந்துக் கொள்ளும் முறை போன்ற அறிவுரையை நிகழ்த்திய தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் வழிகாட்டலில் படி ஆரம்பமாகியது.

இப்பாராளுமன்றத்தின் சத்தியப் பிரமானம் தலைவரின் தூய சிந்தனையின் வெளிப்பாடாகும்.

"தாருஸ்ஸலாம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நான்
பாராளுமன்ற சட்டங்களையும்,
பாரம்பரியங்களையும் மதிப்பேன் என்றும்,
பாராளுமன்றத்திற்கு என்னாலான பணிகளைச் செய்வேன் என்றும்,
இந்தப் பதவியில் இருக்கும் வரை பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்வேன்
என்றும் திடசங்கட்பம் பூணுகிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கட்சியில் உள்ள விசுவாசத்தினாலும், தலைவரில் உள்ள மரியாதையாலும், சமூகத்தின் மேல் உள்ள அக்கறையாலும் நாம் இப்படி சத்தியம் செய்து கொள்கிறோம். ஆனால் அது சத்தியம் மொழிதல் என்றே கூறவேண்டும். கூறப்பட்ட சத்தியம் நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்றால் தான் இல்லை.

கூச்ச நிலையைப் போக்கி உறுப்பினர்கள் பேச ஆரம்பிக்க முடியுமானால், சிறந்த ஒரு நிலைக்கு வருவார்கள் என்பதில் ஐயமில்லை. இதற்கு உதாரணமாக என்னையே எடுத்துக்கொள்ளலாம்.

பாடசாலையில் பல நாடகங்களில் நடித்திருந்த போதும், நான் பாராளுமன்ற கூட்டத்தொடர்களில் அமர்ந்து விட்டுச் செல்வதே ஒழிய பேசுவதற்கான சந்தர்ப்பத்தை நானாக ஏற்படுத்தவில்லை. எனக்கு தூண்டு கோலாக இருந்தவர் அல்-ஹாஜ் மக்கி அவர்கள். 10வது கூட்டத்தொடரில் என்னை அவர் பேச வைத்தார். அதன் பின் வந்த ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் எனது பேச்சு சிங்கள, தமிழ் மொழிகளில் வெளிவந்தன.

தொடர்ந்து வந்த காலங்களில் இரண்டாவது பாராளுமன்றம் மிகவும் விருவிருப்பும், உட்சாகமும் நிறைந்ததாகவும் காணப்பட்டது. இதன் அமர்வு 6 மணிக்கு கூட்டப்பட்ட போதும் இரவு 10 மணி வரைத் தொடர்ந்தது. இதில் சிலருக்குப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்காமலும் போனதுண்டு.

இவ்வாறு இனிதாக நடைபெற்ற இப்பாராளுமன்றத்தில்

*பெண்களை வாட்டும் சீதனம்*
*வட்டியில்லா வங்கி முறை*
*லிபியா நிலவரம்*
*ஜனாதிபதிக் கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை*
*அவசர காலச் சட்டம்*
*சமாதானப் பேச்சு வார்த்தை*
*முஸ்லிம் மக்கள் படுகொலை*
*முஸ்லிம் மாகாணம*

போன்ற முக்கிய விடயங்கள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு, பல வாரங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றம் பாராளுமன்றத்தைத் தாக்கியது. சிலரை பட்டம் பதவிகள் தேடிவர, சிலர் பட்டம் பதவிகளை தேடி அலைந்தனர். பழைய கட்டடத்தில் இயங்க வெட்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் காரியாலயம், கொள்ளுபிட்டியைத் தொடர்ந்து தெஹிவலைக்குச் சென்றது. கட்சிக் காரியாலயம் புதுக் கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்ததும் தாருஸ்ஸலாம் பாராளுமன்றத்தின் தேவையும் உணரப்பட்டது.

மீண்டும் 1998 ஏப்ரல் மாதம் 24ம் திகதி மூன்றாவது தாருஸ்ஸலாம் மாதிரிப் பாராளுமன்றம் ஒரு சிறு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமானது.

பாராளுமன்றத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இட வசதியின்மை, உறுப்பினர்களின் வரவின் சரிவுகள் தடைகளாக அமைந்தன. இருந்தும் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு சிலரானாலும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான முயற்சிகளில் இறங்கியது போற்றப்படத்தக்கதொன்றாகும்

**எமது சமூகத்தின் உயர்வுக்கும், ஆற்றல்களுக்கும் ஊக்கம் கொடுத்து நாளைய சமூகத்தின் காவலர்களாக மாற வேண்டியது, அக்கறையுள்ள படித்த பட்டம் பெற்றவர்கள் அனைவரின் கடமை என்பதை மனதில் கொண்டு, தாருஸ்ஸலாம் மாதிரிப் பாராளுமன்றம் புனித யாத்திரை மேற் கொள்ள பங்களிப்புச் செய்வீர்களா என் இனிய நெஞ்சங்களே?**

## Hon. K. M. M. Mahroof ; J.P. ; MDP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தி இல்லம் - அமைதியின் உறைவிடம்



அமைதியின் பெயர்தான்
சாந்தி !
இந்த இல்லத்தின் பெயரும்
சாந்தி !

அமைதியைத் தேடி
அகிலமே அலையுது.
கூட்டம் பல சேர்ந்து
கூப்பாடு போடுது.
இருந்தும்
எட்டாத தூரத்தில்
கிட்டாது போனது
சாந்தி !

நாட்டில் சாந்தியில்லை
வாழ்வில் அமைதியில்லை
உள்ளத்தில் உவகையுமில்லை!!
வாழ்வையிழந்து
பல ஜீவன்கள்
அகதிகளாய்
அல்லும் பகலும்
அங்குமிங்கும் அலையுது.

அகதிகளுக்கு இல்லம்
அமைத்து
அத்தோடு விடாமல்
அவர்கள் தொலைத்த
அமைதிக்கும்
இல்லம் அமைத்து

சாதனை புரிந்தார்
ஒருவர் - அமைச்சர்
அஷ்ரஃப் என்பது
அவருக்குப் பெயர்.

எங்கு பறந்தாலும்
கூடு திரும்பித்தான்
ஆகனும் - குருவி
எங்கு ஓடினாலும்
இடுக்கில் ஒளிந்தாலும்
இங்கு வந்தே ஆகும்
சாந்தி !

நாளை வரும் பொழுதொன்றில்
இந்த இல்லத்திலிருந்து..
இகமெங்கும்
சாந்தியின் முரசொலிக்கும்.
அகிலத்தில்
இனிதாய் அமைதியும்
பிறக்கும்.

அன்று....
எங்கள் அண்ணல்
அரியாசனத்தில் அமர்ந்து
அரசோச்சுவதும் நடக்கும் !

'கலைநெஞ்சன்'
Hon. R.F. Ashroff Ali ; MDP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களும் அரசியலும்



இலங்கையில் தொன்றுதொட்டுமுஸ்லிம்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் நிறைய உள்ளன.

அரேபியர்களின் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார ரீதியான செல்வாக்கு அதிகரித்தது எனலாம்.

மன்னராட்சி நிலவிய காலங்களில் வியாபார, வர்த்தக உறவுகளோடு மட்டுமல்லாது, அரசர்களுக்கு படைப்பலத்தையும் வழங்கி ஆட்சியைக் கைப்பற்றவும், அரசைக் காக்கவும் உதவி புரிந்தனர். இதன் மூலம் இவர்களுக்கு இலங்கையில் குடியேறுவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் வழங்கி கௌரவித்தனர்.

அரசியல் விழிப்புணர்ச்சியையும், சமூக எழுச்சியையும் உருவாக்குவதில் அறிஞர் சித்திலெப்பை அவர்கள் பின்னர் கூடிய பங்காற்றினார் எனலாம்.

முஸ்லிம்களின் அவ்வப்போது தங்கள் மத்தியில் தோன்றிய தலைவர்கள் மூலம் அரசியல் போராட்டங்களை நடாத்தி, உரிமைகளை வென்றெடுத்த போதிலும் - முஸ்லிம்களுக்கென்று ஒரு அரசியல் தலைமைத்துவம் சரியாக அமையாதது தொடர்ந்தும் ஒரு குறையாகவே இருந்து வந்தது.

மேலும் முஸ்லிம்களுக்கென்று அரசியல் ரீதியான ஒரு அமைப்பைக் கட்டி எழுப்புவதில் அன்றைய முஸ்லிம்கள் வெற்றி கண்டிருந்தாலும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வலுவான ஒரு அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.

முஸ்லிம்கள் கல்வியைத் தவிர - வர்த்தக வியாபாரத்திலேயே கூடியளவு நாட்டமுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்.

இன ரீதியான, மத ரீதியான பிளவுகள் தொடர்ந்தும் இலங்கையில் தீர்க்க முடியாத பிணியாக இருந்து வந்த அதே வேளை, அரசியல் ரீதியான புறக்கணிப்பும் காணப்பட்டது.

முதன்முதலாக முஸ்லிம்களுக்கென்று ஒரு தனியான அரசியற் கட்சியின் அவசியம் உணரப்பட்டது. ஆனால், அத்தகைய ஒரு எண்ணக்கருவை ஒன்றுபடுத்தி அதன் கீழ் போராடுகின்ற வகையில் முஸ்லிம்கள் இருக்கவில்லை. முஸ்லிம்கள் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் செறிந்து வாழ்கின்றமையும், ஒரு சரியான தலைமைத்துவம் இல்லாமையும், தியாக உணர்வு குறைவாக இருந்தமையும் இவற்றுக்கான காரணங்களாகும்.

இதனால், முஸ்லிம்களுக்கென்று உருவாக்கப்பட்ட தனிக் கட்சிகளினால் தொடர்ந்தும் வெற்றி பெற முடியாமல் போனது.

மேலும், இலங்கை முஸ்லிம்களின் தலைமைத்துவம் தலைநகரத்தில் மையப்படுத்தப்பட்டிருந்தமையால், அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் பின்தங்கிய ஒரு நிலையிலேயே இருந்தனர்.

இஸ்லாமிய அடிப்படையில் இல்லாது, மேற்கத்திய பாணியிலான அரசியல் மயப்படுத்தப்பட்டவர்களாகவே முஸ்லிம்கள் காணப்பட்டார்கள். அரசியலும்-மதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறாகக் கணிக்கப்பட்டன.

சிறுபான்மைத் தமிழ் மக்கள் கல்வியில் மேலோங்கிக் காணப்பட்டனர். இவர்கள் தங்களது உரிமைகள் மறுக்கப்பட்டபோது, அவற்றுக்காக ஜனநாயக ரீதியான போராட்டத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். சிறுபான்மை தமிழ் மக்களின் போராட்டத்தினால், சிறுபான்மைத் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் கவரப்பட்டனர். அவர்களும் தங்களுக்கு அரசியல் ரீதியான தலைமைத்துவத்தை வேண்டி நின்றனர். முஸ்லிம்களுக்கென்று உருவாக்கப்பட்ட சிறுசிறு கட்சிகள், ஒரு குறுகிய பிரதேச வாரியான போக்கையே காட்டின. இதனால் அவை பேரினவாதத்திற்கு எதிராக நின்று தாக்குப்பிடிக்க முடியாதவையாகக் காணப்பட்டன.

இத்தகைய ஒரு நிலையில் இலங்கையின் பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழ்கின்ற கிழக்கிலிருந்து, அதைத் தளமாகக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் ஒரு கட்சி முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்க உருவாக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தங்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என மக்கள் கருதினார்கள் - இப்பொழுதும் கருதுகிறார்கள் எனக் கூறுவதற்கும் ஓரளவு இடமுண்டு.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவான காலத்தில், இலங்கை முஸ்லிம்களின் (குறிப்பாக வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம்களின்) முக்கிய தேவையாக இருந்த தன்மானமும் சுய கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், அதற்காகக் குரல் கொடுக்கப்பட்ட ஒரு தலைமையின் அவசியம் மேலோங்கி நின்றது. முஸ்லிம்களின் கடந்தகால வரலாறு கூட இதையே புலப்படுத்துகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட பின்பு, முஸ்லிம்களின் அரசியல் வசந்தகாலம் ஆரம்பித்து விட்டது போன்ற ஒரு அரசியல் அலை வீசத்தொடங்கியது.

ஏனைய கட்சிகளை விட, இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம்களை ஒன்றுபடுத்துவதில் இந்தக் கட்சி வெற்றி கண்டது. இக்கட்சி இஸ்லாமிய அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்தமை அதற்கான ஒரு காரணமாக இருந்த போதிலும், அதன் தலைமைத்துவத்தின் மீது மக்கள் கொண்டிருந்த விசுவாசம் உறுதியாக இருந்தமையே பிரதான காரணமாக இருந்தது. தங்களுக்குக் கிடைத்த மிகச்சிறந்த தலைமைத்துவமாக முஸ்லிம்கள் அதைக் கருதினார்கள்.

முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதிலும், முஸ்லிம்களின் நலனைக் கட்டிக் காப்பதிலும் இக்கட்சி போராடி வெற்றி கண்டது.

ஒரு குறித்த தலைமைத்துவத்தின் மீது மட்டும் முஸ்லிம்கள் தங்கியிருக்க முடியாது. முஸ்லிம்கள் தங்கள் எதிர்கால அரசியல் பற்றிச் சிந்திக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஜனநாயக ரீதியில் முஸ்லிம்களுக்குரிய உரிமைகள் தொடர்ந்தும் பாதுகாக்கப்படுமா? முஸ்லிம்களுக்குரிய பிரதேச இறைமை பாதுகாக்கப்படுமா? என்பன போன்ற பல சந்தேகங்களை எதிர்கால அரசியல் நிலை தொடர்பாக நாம் எழுப்பவேண்டியுள்ளது. தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையே சரியாகப் பின்பற்றப்படாத ஒரு நிலையில் அது முஸ்லிம்களுக்குப் பாதகமாகவே உள்ளது எனலாம்.

எதிர்காலத்தில் அது மாற்றப்படுமா என்பது கேள்விக் குறியானதால், முஸ்லிம்கள் கூடுதலாக வாழும் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்தும் இடம்பெற எதிர்காலத்தில் வாய்ப்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை வரலாற்றில் என்றும் மறக்கப்பட முடியாத ஒரு நிகழ்வாகும்.

இதுபோன்ற ஒரு நிகழ்வு இனிமேலும் ஏற்படாது என்பதை உத்தரவாதப்படுத்த முடியாத நிலையிலேயே முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலையும் காணப்படலாம்.

அரசியற் கட்சிகளினால் பாராளுமன்றத்தில் ஜனநாயக ரீதியான போராட்டத்தை நடாத்த முடியுமே தவிர, ஆயுதமேந்திப் போராட முடியாது.

சமூகங்களுக்கிடையில் இனரீதியான உணர்வுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒவ்வொரு இனத்திலும் தமது இனத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு இனமும் அடுத்த இனத்தைச் சந்தேகத்துடன் பார்க்கும் நிலை அதிகரித்துக் கொண்டுவருகிறது.

இத்தகைய ஒரு நிலையில் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க பல தீர்வுகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அவை இதுவரையில் முஸ்லிம்களின் பிரச்சினையை தீர்த்துவைக்க எவ்வகையிலும் உதவுவதாகத் தெரியவில்லை. இத்தகைய ஒரு நிலையில், முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை உள்ளடக்கிய 'தென்கிழக்கு அலகு' பற்றிச் சிந்திக்கப்படுகிறது. 'தென்கிழக்கு அலகு' கோரிக்கை அமுல் செய்யப்படுமாயின், அது நிச்சயமாக முஸ்லிம்களின் எதிர்கால அரசியலில் பெருமளவு மாற்றத்தைக் கொண்டுவரலாம்.

எவ்வாறாயினும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாத ஒரு நிலையில், முஸ்லிம்களின் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட முடியாத ஒன்றாகவே தொடர்ந்தும் இருக்கும்.

இத்தகைய ஒரு நிலையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஒரு கட்சியினாலேயே எதிர்கொள்ள முடியும். எனவே, முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலை என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்ப்புகளிலும், செயற்பாடுகளிலுமே தங்கியிருக்கின்றது என உறுதியாகக் கூற முடியும்.

## Hon. Hawthar Ali; MDP

*Minister of Cultural, Religious Affairs and Social Services*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தியின் வழியில் தளபதி அஷ்ர∴ப்



சிறுபான்மைச் சமூகத்தின் விடயத்தில் இலங்கைத் திருநாடு வழிதவறிச் சென்று கொண்டிருந்த பாதகமான காலகட்டத்தில், எம் சமூகத்தை ஒற்றுமையின்பால் ஒன்று திரட்ட ஒளிக்கீற்றாய் வந்துதித்த எமது பாராளுமன்ற ஜனாதிபதி மேன்மைமிகு அல்-ஹாஜ் **M.H.M. Ashraff** அவர்கள், தனது 51வது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நாள் ஒரு பொன்னாளாகும்.

ஐக்கியத்துக்கும் சத்தியத்துக்கும் அர்த்தம் புகட்டும் தாருஸ்ஸலாம் (சாந்தி இல்லம்) எல்லார் எண்ணங்களையும் பரிசுத்தத்தின் சிகரத்திற்கு எடுத்துச் செல்லும் பேரில்லமாகும். இவ்வில்லத்தின் வதனத்தையும், அது விட்டுக் கொண்டிருக்கும் சுவாச ஸ்பரிசத்தையும் பார்த்துக் கொண்டும், அதன்படி செயலாற்றிக் கொண்டுமிருக்கும் அல்-ஹாஜ் **M.H.M. Ashraff** அவர்களின் உயர்ந்த கொள்கையின் தாற்பரியத்தை என்ன வென்று கூறுவது?

பல்வேறுபட்ட சிரமங்களையும் ஒரு பொருட்டாகக் கருதாது, அல்லல்படும் மாந்தர்களின் விடிவிலேயே தனது நிம்மதி தொக்கி நிற்கிறது என எண்ணும் மானிடப் பண்பின் விலைதான் என்னவென்போம்?

இத்தகைய பண்புகளைத் தன்னகத்தே கொண்ட தலைவன், தனது இரத்தத்தோடு இரத்தமாக ஓடிக் கொண்டிருக்கும் சமாதானத் திரவம், அதற்குண்டான வடிவத்தை இந்நாடு அனுபவத்தில் காணவேண்டும் என்ற நப்பாசையில் பெரும் பாடுபட்டு வருகிறான்.

அவர்களின் இவ்வினிய கனவு, நிதர்சனமாவதற்கான முயற்சிகளில் நாம் அனைவரும் தோள் கொடுத்து உதவி புரிவோமானால், இதுவே எம்மால் இத்தேச மாதாவுக்குச் செய்யும் பேருபகாரமாகும்.

**Hon. M.H.M. Jiffrey; MDP**

*Govt. Chief Whip*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கே ஒரு கலைஞர்
# இங்கே ஒரு கவிஞர்



இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளில் அன்னை தமிழ் மெத்தவும் சீராட்டிப் பாராட்டப்படுவது முஸ்லிம் சமுதாயத்தினராலேயே!

இதைத் தைரியமாகச் சொல்ல எனக்குத் துணிவிருக்கிறது!

நல்லவேளை, தமிழ்த்தாய் இரு பிள்ளைகளைக் கண்ணாகப் பொன்னாகப் பெற்றெடுத்தாள்!

ஒரு பிள்ளை, 'உடல் நலம் குன்றியிருக்கிற நேர'த்தில் இன்னொரு பிள்ளை அவளை நன்றாகவே கவனித்துக் கொள்கிறார்!

இந்த வகையில் 'அஷ்ர.்.ப்' என்கிற ஒரு கவிஞரை அரசியல்வாதியாக நோக்காமல் ஒரு 'பறவைப் பார்வை' பார்த்தால், அலைகடலுக்கு அப்பால் உள்ள 'கலைஞர்' எனப்படுபவரும் கண்ணில் படுகிறார்!

இருவரிடமும் இருக்கிற ஒற்றுமை அப்படி!

இலக்கியத் துறையில் இருவருமே ஒரு படகில்!

பொதுவாக அரசியலுக்குள் நுழைந்து விடுகிறவர்கள் இலக்கியத்தை மறந்து போவார்கள். அல்லது உதாசீனப்படுத்துவார்கள்.

ஆனால், கலைஞரும் கவிஞரும், 'ஜெ'அம்மாவின் எண்ணிலடங்கா அறிக்கைகளும், அமரர் 'கல்கி'யின் நாகதந்தி துறவியை நினைப்பூட்டியும் கங்கொடவல தேரர் உமிழும் நச்சுக்கருத்துக்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டும் இலக்கியப் பணிபுரிகிறார்கள். பிரமாண்டமான வைபவங்கள் நடத்தி எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் கௌரவித்தவண்ணம் இருக்கிறார்கள். இயன்றளவு இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு அமைதி, நிம்மதி காண்கிறார்கள்.

எந்நாளும் 'அம்மா'வையும், 'உம்மா'வையும் நினைக்கிறார்கள்.

எப்பொழுதும் எல்லா உயர்வுகளிலும், திருவாரூர், திருக்குவளைக் குடிலுக்குப்போய் அஞ்சகம் அம்மையாரிடம் ஆசி வேண்டி நின்றவர் கலைஞர். அன்னையார் ஓய்வுறக்கத்தின் பின் நிழற்படத்தில் துணையை நாடி நிற்கிறார்.

கவிஞர் அவர்களோ, 'எழுதாத, எப்பொழுதுமே வாசிக்காத தனது உம்மாவைப் பற்றி ஒரு கவிதையை பன்னிரண்டாவது வயதில் எழுதினார். உயிர் எழுத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் கற்றுத் தந்தவள் எனது தாய். உயிரைக் காட்டித் தந்துவிட்டு உடலைத் தேடவிட்ட உம்மாவின் உதிரத்திலிருந்து கிடைத்த உயர்வுகள் இன்னுமின்னும் இதயத்தின் அடியில் வற்றாமல் சுரந்து கொண்டேயிருக்கிறது எனப் பதிந்திருப்பதை மெய்ப்பிக்கும் வகையில், அந்த மாபெரும் மண்டபத்து (BMICH) அரங்க மேடையிலிருந்து இறங்கி வந்து, முன்வரிசையில் அமர்த்தப்பட்டிருந்த அன்னையாரிடம் ஓடிப் போய், அவர் காலடியில் அமர்ந்து 600 பக்க கவிதைத் தொகுப்பைச் சமர்ப்பித்து, ஆசிகள் பெற்றுக் கொள்கிறார். (நாள்: 1999-09-26)

இருவருக்குமே மிக இளவயதில் எழுத்தே இன்பமாக அமைந்தது.

கையெழுத்துச் சஞ்சிகை நடத்தி கையெழுத்துக்களையே பக்கம் பக்கமாகக் கண்டார்கள். 10க்கும் 15க்கும் இடைப்பட்ட பருவத்தில் எழுதாமல், ஒரு நாளும் இருந்ததில்லை!

பின்பு, அச்சிலே அவருக்கு ஒரு 'விடுதலை'! இவருக்கு ஒரு 'சுதந்திரன்'.

கலைஞருக்குச் சொந்தமான 'முரசொலி' இற்றை வரைக்கும் தினமும் அவரை எழுத்தாளனாகவே காட்டிக் கொண்டேயிருக்கிறது. கவிஞருக்கோ அப்படியொரு நாளேடு இல்லை என்றாலும், இலங்கையில் வெளியாகின்ற எந்தவொரு இதழும் நாள்தோறும் கட்டுரையும் கவிதையும் போடக் காத்துக் கொண்டுதான் இருக்கின்றன!

இப்பொழுது,

இருவரும் பெரும்பாலும் பயணங்களில்தான் எழுத்துவித்தை புரிகிறார்கள்.

அவர், 'பாண்டியன் எக்ஸ்பிரஸ்' அல்லது 'மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ்' தொடர் வண்டியில் அமர்ந்தால் காவியமும் காப்பியமும் கூடப் பிறந்து விடும்!

இவரும் 'ஹெலி'யிலோ, பயணிகள் வான் ஊர்தியிலோ ஏறி அமர்ந்ததும் பேனாவும் பேப்பரும் தானே!

என்னைப் பொறுத்தவரையில், சென்னை கலைவாணர் அரங்கில் கலைஞர் சம்மதத்தில் நடக்கும் பல இலக்கிய நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றுள்ளேன்.

அப்படியொரு நிகழ்ச்சி இங்கும் நடைபெறாதா என்று ஏங்கிக் கொண்டிருந்த வேளையில் நிகழ்ந்தது தான் அந்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுற்ற "நான் எனும் நீ"

1979 - ஜனவரி - 29லிருந்து 31 வரையில் - இருபது ஆண்டுகளுக்கு முன்பு - இதே சர்வதேச அரங்கில் 'அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நான்காம் மாநாட்டில் பேருவளைப் பெருமகனார் தேசமான்ய அல்-ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் ஏற்பாட்டில், இன்பத் தமிழ் ஒலித்தது. அதன்பின் மீண்டும் இப்பொழுதுதான் ஒலித்தது 'உண்மையான தமிழ்'!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூற்றாண்டின் முத்தான நிகழ்வாக அமைந்தது அது.

அதுபோல இன்னொன்று அடுத்த நூற்றாண்டிலும் நிகழ்த்திட வேண்டும் கவிஞர் அவர்களாலேயே! இன்ஷா அல்லாஹ்.

26.9.1999ன் அந்த 'நான் எனும் நீ' வைபவத்தில், 'நானாக'த் திகழ்ந்த கவிஞர், அந்த வார்த்தையைப் பிரயோகித்து தனக்குத்தானே எதையெதையோ செய்து கொண்டிருக்கலாம், ஏவிவிட வேண்டியது தான்; செய்திருப்பார்கள் பலர்.

ஆனால், புகழ்மாலை சூட்டப்பட்டு, பொன்னாடை போர்த்தப்பட்டவர்கள் வேறு ஒன்பதுபேர்!

அதுவும் மூவின கலை-இலக்கிய-இதழியல் வித்தர்கள்!

இறுதியாக - விழாவின் சிறப்புமலரில் இடம்பெற்றிருக்கும் 'கவிஞரின் செய்தி'யிலிருந்து இரு பராக்களைக் கொய்து தருவதன் மூலம் என்னுடைய இந்த எழுத்துக்கள் சிறப்புற வேண்டுமாய் விரும்புகிறேன்.

- 'என் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் எனது எழுத்துப் பயணத்தையும், எனது தேடலையும் ஒரு தவமாகவே மேற்கொண்டு, அதன்மூலம் எனது இதயத்தை ஆற்றிக் கொண்டு வருகின்றேன். இவ்வெழுத்துக்களே எனது மனத்தில் பசுமையையும் வனப்பையும் கொண்டு வந்து இருத்துகின்றன. அவ்வெழுத்துக்களுக்கு என் மரணம் வரைக்கும் கௌரவமளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதே என் இதயத்தின் பிரார்த்தனையாகும்'.

- 'எழுத்தின் மூலமாவது மட்டும் நாம் எப்போதும் மனித நேயத்தையும், சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் காக்க திடசங்கற்பம் பூணுவோம்'.

இது அலை கடலுக்கு அப்பாலுள்ள கலைஞர் அவர்களுக்கும் சாலவும் பொருந்தும்.

அன்னை தமிழுக்காக அவரும் இவரும் ஆற்றும் பணி இமயத்தின் உயரத்தைத் தாண்டுவதாக.

ஓர் அடிக்குறிப்பு : இருவரது அரசியல் ஒற்றுமைகளையும் கொஞ்சம் தொட்டிருக்கலாமே என்போரும் இருப்பர்! என் பேனாவோ 'உனக்கு வேண்டாத வேலை அது' எனத் தடைபோட்டு விட்டது!

## 'Tamil Mani' Hon. Mana Mackeen; MDP

*Minister of Juctice & Constitutional Affairs*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தின் ஓர் இல்லம்



சாந்தி இல்லமே!! உன்மீது சாந்தி உண்டகுக!
மேற்கே அமைந்திருக்கும் உன்னை நோக்கி வடக்கே வன்னிமா நகரிலிருந்து வருகிறேன் உன் பாராளுமன்ற மாணவன்
பாவா மொஹிதீன்

சாந்தியில்லமே!....
உன் சமாதானத் தூதின் வேகத்தை என்னவென்று வர்ணிக்க!
சாந்தியே! நீ உன் சமாதானத் தூதை மக்கள் முன் கொண்டு
வருவதைக் காணும்போது எங்கள் உள்ளம் எல்லாம் குளிர்கிறது நீ அறிவாயா?

சாந்தி இல்லமே உன்னகத்தைக் கொண்டிருக்கும் உறுதியான
உயர்வான தலைவரின் செயல் திறனோ!
உன்னையும் மெச்சிவிடும் போல் இருக்கிறதே!
அவரின் செயல் திறனை என்ன வென்று சொல்ல

சாந்தியில்லமே! ஈழமே ஆச்சரியப்படும் வண்ணம் நீ!
செய்யும் செயல்பாடுகளைக் கண்டு
எத்தனை பேர் மனம் புழுங்குகிறார்கள் தெரியுமா?!

நீ வைத்திருக்கிறாய் ஒரு பாராளுமன்றம்!
அதுவோ நீ அமைந்திருக்கும் நாட்டின் பாராளுமன்றம்! அதை
விடவும் சிறப்பாகவல்லவா இருக்கிறது!
அப்பாராளுமன்றம் தன்னகத்தே கொண்டிருக்கும் தலைவர் (ஜனாதிபதி)யோ!

தரணியிலுள்ள தலைவர்களையெல்லாம் தலைகுனிய
வைக்கும் தலை சிறந்த தர்க்கவாதி!
மட்டுமல்ல தலை நிமிர்ந்து நடக்கும் தயாளன்!
அவர்!

அவரின் தலைமைத்துவத்தை நான் சொல்லித்தான்
நீ அறிய வேண்டுமா!
நீயே அன்றாடம் அறிகிறாய்தானே!

நீ கொண்டிருக்கும் எங்கள் தலைவர்
கிழக்கின் மைந்தன்தான்
ஆனால் அவரின் சேவையோ! வடக்கே உள்ள வன்னிமா நகரம்
முதல் ஈழத்தின் எல்லைக்கே செல்கிறதே! நீ அறிவாயா?
ஏன் அறியமாட்டாய்? கிழக்குமுதல் மேற்குவரை!
தெற்கு முதல் வடக்கு வரை அனைவரும்!
உன் காலடியில்தானே சமாதானம் கோரிநிற்கிறார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியே! உன் தாயின் வளர்ச்சி வேகத்தின் பரிணாமம்
நீ தலைமையகமாகக் கொண்டிருக்கும் உன்
நாட்டின் ஆட்சியையே தன் கையில் தஞ்சமடைய
வைத்திருப்பதைப் பார்த்தாயா?

சாந்தியே! உண்மையில் நீ மகா வல்லவன் ஏன் தெரியுமா?!
நீயோ கொண்டிருக்கும் கட்சி ஒரு தனித்துவமான
கட்சியாக இருந்தாலும் உன்னிடத்தில்!
ஜாதி, மத, பேதம் கிடையாது
இது எதைக் காட்டுகிறது தெரியுமா?
இந்த யுத்த பூமிக்கு நீதான் சமாதானக் கொடியை
காட்டுகிறாய்! என்பது மட்டுமல்ல!
நீயே இந்நாட்டிற்கு சமாதானத்தைக் கொடுப்பாய்

சாந்தியே! உன்னால் மட்டும்தான் சமாதானத்தைக் கட்டியெழுப்ப
முடியும்! என்பதையுமல்லவா? காட்டுகிறது
உன் வேகம் உண்மையில் வர்ணிக்க முடியாதப்பா!

தாருஸ்ஸலாமே! உன்மீது என் ஸலாம் ஈற்றில்
உன் வளர்ச்சியில் என் போன்றோரின் பங்கு
எப்போதும் காத்து நிற்கிறது!
கதவுகளைத் தட்ட முன் திறக்கும் உன் அழைப்பே!
போதும் என் கதவு திறக்க
என்னை அழைக்க மறவாதே!


சாந்தியே! நீ மென்மேலும் வளர என்றென்றும்
எம் வாழ்த்துக்கள்!
மட்டுமல்ல எங்கள் பிரார்த்தனைகளும் உனக்கு
என்றென்றும் உண்டு!
உயர்க தலைவரின் பதவி! வாழ்க சாந்தியில்லம்!
வழங்குக சமாதானத்தை! மகிழ்வோம் அனைவரும்

**Hon. J. Bava Mohideen; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (தாருஸ்ஸலாம்) சாந்தி இல்லம்



தினமும்
இரத்தத்தில் தோய்த்தெடுத்த
பேனாக்களால்
பிணங்களின் மேல்
சரித்திரம் எழுதும்
தரித்திரம் பிடித்த
சமுதாயத்தில்
சமாதானம் - எனும்
பகல்கனா காணும்
காலத்தில்
சாந்தி இல்லம் - எனும்
சமாதானச் சின்னமமைத்து
சமத்துவம் பேணிட வந்த
சாந்தி இல்லமே.

தேசியக் கொடியில்
மதங்களை சமாந்தர
கோடுகளாக்கியவர்கள்
மதங்களை சமாதானமாக்க
மறந்து விட்ட போது
சமாதானக் கொடி
அமைத்திட்ட
சாந்தி இல்லமே.

காதலுக்காகவே
சரித்திரம் படைக்கும்
சமுதாயத்தில்
சாந்தி இல்லம் எனும்
சமாதானச் சின்னம்
அமைத்து
சமத்துவம் புகட்டும்
சாந்தி இல்லமே
உன் வெற்றிக் கொடி பறக்க
என் உதிரமே அர்ப்பணம்
இது அதற்கான சமர்ப்பணம்
வாழ்க வாழ்க நீ வாழ்க.

தாஜ்மஹால் எனும்
காதல் சின்னம்
சாஜஹான் தந்தான்
சுயநலத்திற்காகவே!
சாந்தி இல்லம் அமைத்து
எமக்களித்த செம்மலே
உன் பணியை
என்னவென்பது?

**Hon. A.M.M. Kismath; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களும் எதிர்கால அரசியல் நிலையும்
## (ஆய்வுக் கட்டுரை)



முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலையை ஆராய்வதற்கு முன் இலங்கையின் ஆதி வரலாற்றுப் பின்னணிகளையும் மனதில் கொண்டு ஆராய்வதே சாலச் சிறந்ததாகும். இலங்கையின் வரலாற்று மரபு மகாவம்சக் கதைகளோடு தொடர்புபட்டு விஜயனின் வருகையோடு ஓரளவு நம்பகரமான கர்ண பரம்பரைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

இந்தியாவின் லாட்டா நாட்டிலிருந்து விரட்டப்பட்ட விஜயனும் அவனது கெட்ட தோழர்கள் 700 பேரும் உடைந்த கப்பலில் சஞ்சாரித்து இறுதியாக தம்பபண்ணியை வந்தடைந்தார்கள் என்றும், அனுராதபுரத்தில் அரசோச்சிய இயக்க வம்சத்தைச் சேர்ந்த குவெணியைச் சந்தித்து மணமுடித்து அனுராதபுரத்தைச் சூழ்ந்திருந்த பிரதேசத்திற்கு விஜயனும் அவனது தோழர்களும் உத்தியோக பூர்வமாக ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுக்கொண்டு அதன் விளைவாகவே அனுராத என்ற அமைச்சரின் கீழ் அனுராதகம இராஜ்ஜியம் தோன்றி, பின்னர் அது அனுராதபுரமாக மாறி இலங்கையின் முதலாவது தலைநகரமாக மாறியது என்பதை மிகச் சுருக்கமாக மகாவம்சக் கதைகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையின் முதல் தலைநகராக அனுராதபுரம் விளங்கிய காலத்தில் கூட, இலங்கைக்கும் வெளிநாடுகளுக்குமிடையே அரசியல், கலாச்சார, பொருளியல் தொடர்புகள் நிலவியுள்ளதை வரலாற்று நெடுகிலும் காண முடிகிறது. இக்காலத்தில் இலங்கை கிரேக்க, ரோம, சீன, பாரசீக பேரரசுகளோடு தொடர்பு கொண்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சில அரபு நாட்டு நாணயங்களும் ஆங்காங்கே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு வர்த்தகத்தில் சிறப்புப் பெற்ற அரேபியர்கள் மேற்கிலிருந்து கிழக்காக நடைபெற்ற வர்த்தகத்தால் பெரும் புகழ் பெற்றவர்களாகவும் விளங்கியுள்ளனர்.

சீனாவிற்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற பட்டுத்துணி வியாபாரத்தில் முஸ்லிம் வர்த்தகர்கள் கொண்டிருந்த பங்களிப்புக்கள் இன்னும் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களால் வியப்புக் கொள்ளும் அளவிற்கு நியாயமாகவும், நேர்மையாகவும் வாணிபம் செய்த கூட்டத்தினராக அரேபிய வர்த்தகர்கள் விளங்குகிறார்கள்.

பெரும்பாலும் பண்டமாற்று முறை மூலம் நடைபெற்ற இவ்வர்த்தகத்தில் மொறோக்கோ, அரேபிய வர்த்தகர்கள் வாசனைப் பொருட்களையும், (ஏலம், கறுவா, மிளகு, சாதிக்காய், கராம்பு) பட்டு, மாணிக்கக் கற்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களை மேற்கே கொண்டு சென்று, கிழக்கே புடவை போன்ற பொருட்களை எடுத்து வந்த பண்பு வாய்ந்த வணிகர்களாக முஸ்லிம்கள் அரச வம்சத்தினரோடு தொடர்பு கொண்டிருந்ததோடு, வைத்தியத் துறையிலும் பாதுகாப்பு, சுழியோடி பெரிய அரண்களைக் கட்டுவதிலும் ஆர்வங் காட்டிய முஸ்லிம்களின் வரலாறு, வரலாற்றில் ஆழப்பதிந்துள்ளதை பல சான்றுகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொள்ளலாம். கண்டிக் கோட்டை சிங்கள மன்னர்களின் அரண்மனைகளில் கூட அவர்களின் அன்புக்குரியவர்களாக முஸ்லிம்கள் அலங்கரித்துள்ளதை அறிய முடிகின்றது.

15ம் நூற்றாண்டின் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் பின்னரும் மதச்சீர்திருத்தத்தின் பின்னரும் கூட இலங்கையிலும் கீழைத்தேய நாடுகளிலும் அரேபியர்களே கடலோடும் வர்த்தகத்தில் புகழ் பெற்றவர்களாக விளங்கியுள்ளதை வர்த்தக ஆசிரியர்களான பேராசிரியர் ஹிட்டி போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

1453ல் மேற்குக் கிழக்காக இருந்த வர்த்தகப் பாதை கொன்ஸ்தாந்திநோபில் நகரை துருக்கியர்கள் கைப்பற்றிக் கொண்டதன் பின் இப்பாதை மூடப்படவே, ஐரோப்பியர் அனுபவித்த விலையுயர்ந்த வாசனைப் பொருட்களையும், மாணிக்கம் போன்ற ஆடம்பரப் பொருட்களையும் எப்படியாவது பெற வேண்டிய அவசியம் ஏற்படவே, கிழக்கே கடல் மார்க்கப் பயணம் செய்யும் துணிகர முயற்சிகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஈடுபட முனைந்தன. கடலோடுவதிலும் கப்பல் கட்டுவதிலும் திசைகளைச் சரியாக அறிந்து கொள்வதிலும் வல்லவர்களாக விளங்கிய அரேபியர்களின் தயவிலேயே முதலாவது மார்க்கப் பயணங்களை போர்த்துக்கள் போன்ற நாடுகள் மேற்கொண்டுள்ளன. 1505ல் இலங்கைக்கு போர்த்துக்கேயர் எதிர்பாராத விஜயம் ஒன்றை மேற்கொள்ளவும், 1948ல் இந்தியாவின் கள்ளிக் கோட்டையை அடையவும் காரணகர்த்தாக்களாக விளங்கியவர்கள் அரேபிய முஸ்லிம்களே என்றால் மிகையாகாது.

ஆபிரிக்கக் கரைக்கு வந்து, கடல் கொந்தளிப்பை எதிர் கொள்ள முடியாது நாடு திரும்பிய போர்த்துக்கேய மாலுமிகளுக்கு வழிகாட்டி, ஆபிரிக்கக் கரையைச் சுற்றி வந்து, இந்தியாவை அடைய வைத்தவர்கள் என்பதை எல்லாம் வரலாற்றை எழுதிய மேற்கத்தியவாதிகள் மூடிமறைத்தாலும், வரலாற்று நூல்கள் சில உண்மையான வரலாற்றை உரிய முறையில் வழங்கி முஸ்லிம்களின் புகழை உயர்த்தியுள்ளமை ஈன்று கவனிக்கப்பாலது.

வரலாற்றாசிரியர்களால் இருண்டகாலம் (Darkken ages) என்று வர்ணிக்கப்படும் காலம் (கி.மு. 10ம் நூற்றாண்டுக்கு முன்னும் பின்னும்) உலக வரலாற்றில் அறிவுத்துறையில் பல கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் ஏற்பட்டமை, அறிவுத்துறையில் ஒரு செழிப்பான வளர்ச்சிக் கட்டமாகும். தொலைகாட்டி, திசையறிகருவி, காகிதம், வெடிமருந்து போன்ற புதிய கண்டுபிடிப்புகளை உலகம் அறியச் செய்த மேதைகள் வாழ்ந்த காலப்பகுதியாக இக்காலப்பகுதி விளங்குகின்றது. பின்னர் ஆத்மீகத் துறையில் சிறிது தளர்வு ஏற்படவே அறிவுசார் அடிப்படைகளை மேற்கே கொண்டு சென்றதன் விளைவாகவே 15ம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி ஏற்பட வித்திட்டது எனலாம்.

உலகம் போற்றும் பல்கலைக்கழகங்களுக்கே முன்மாதிரியாக விளங்கியவர்கள் அரேபியர்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக அரேபியர்களின் செல்வாக்கு கீழைத்தேய நாடுகளில் குறிப்பாக, இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளோடு நெருக்கமாக இருந்துள்ளதை அறியலாம். கீழைத்தேய மன்னர்களின் நன்மதிப்புக் கொண்டும் நாணயமுள்ள வணிகர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் விளங்கியுள்ளதால்தான், பொறுப்பான சில அரச பதவிகளையும் சில முஸ்லிம்கள் இலங்கையில் கூட வகித்துள்ளதை வரலாறு தெளிவு படுத்துகிறது.

இந்த நம்பிக்கையாலும், நியாயமான போக்கினாலும் கவரப்பட்ட சிங்களவர்கள், அவர்களின் பெண்மணிகளை அரேபிய வர்த்தகர்களுக்கு மணமுடித்துக் கொள்ளவும் ஆதரவு காட்டியதால்தான் இலங்கையில் முஸ்லிம்களின் வழித்தோன்றல் ஏற்படக் காரணமாகியுள்ளது. வேர்விலை, புத்தளம் போன்ற கடற்கரைப் பகுதிகளில் இவர்களின் நடமாட்டம் கூடுதலாக இருந்ததால்தான் இன்றும் இப்பிரதேசங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழவும் முடிகின்றது.

கண்டி மன்னர்களுடனும், கோட்டை மன்னர்களுடனும் மிகவும் நெருக்கமான தொடர்பும் விசுவாசமும் கொண்ட முஸ்லிம்கள், 1505ல் போர்த்துக்கேயர் இலங்கை வந்த போதிலும் சுதேச மன்னர்களுக்கே தன் முழு ஆதரவையும் நல்கி வந்ததால் சிங்கள - முஸ்லிம் பிணைப்புக்கள் அண்மைக் காலம் வரை மிக இறுக்கமாக விளங்கியுள்ளது.

ஐரோப்பியர்கள் கீழைத்தேயங்களில் எங்கெல்லாம் சென்றார்களோ, அங்கெல்லாம் அவர்கள் அரேபிய முஸ்லிம்களையே சந்தித்தார்கள். அவர்களின் கீழைத்தேயப் பயணத்தின் வர்த்தக நோக்கத்திற்கும், கிறிஸ்தவ மதம் வியாபிப்பதற்குமான இரு நோக்கங்களுக்கும் முஸ்லிம்கள் பெரும் தடையாக விளங்கினார்கள். மதத்தில் இறுக்கமான நம்பிக்கையும், வர்த்தகத் துறையில் பெரும் நுணுக்கங்களையும் கொண்டிருந்த இவர்கள், அவர்களின் கண்களுக்கு ஒரு பொது எதிரியாகவே தென்பட்டார்கள். 1505ல் இலங்கை வந்த போர்த்துக்கேயரும், 1658ல் இலங்கையைக் கைப்பற்றிக் கொண்ட ஒல்லாந்தரும் 1796ல் இலங்கையை அடைந்த பிரித்தானியரும் 1948ம் ஆண்டுவரை இலங்கையின் கரையோரங்களை முன்பு காட்டிய இரு இனங்களும் ஆட்சி புரிந்துள்ளதையும் 1815லிருந்து முழு இலங்கைக்கும் பிரித்தானிய குடியேற்ற ஆட்சி வியாபித்ததையும் காணலாம்.

குடியேற்றக் காலணித்துவ ஆட்சியின் பின் 20ம் நூற்றாண்டின் இலங்கையில் தோன்றிய தேசியவாத இயக்கத்திற்கு மர்ஹூம் **T.B. Jaya** போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார். முஸ்லிம்களின் பாரம்பரிய உரிமைகளுக்காக, பண்பாட்டு விழுமியங்களைக் கொஞ்சமேனும் விட்டுக் கொடுக்க விரும்பாத அக்கால முஸ்லிம்கள் பல போராட்டங்களைப் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக எடுத்துச் சென்றுள்ளார்கள். மர்ஹூம்களான அப்துல் காதர், வாப்புச்சி மரிக்கார், மார்க்கன் மரிக்கார் போன்றவர்களினதும் அறிஞர் சித்திலெப்பை, அறிஞர் அஸீஸ் போன்றவர்களின் பங்களிப்புக்களும் இன்றைய முஸ்லிம்களால் பெரிதும் மதிக்கப்பட வேண்டியனவாகும்.

தேசியத் தலைவர்களோடு ஒன்றிணைந்து இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திற்கும் முஸ்லிம்கள் தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். சுதந்திர இலங்கையின் தோற்றத்தோடு பிரதமர் D.S. சேனநாயக்காவோடும் பின்னர் S.W.R.D. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும் முஸ்லிம் தலைவர்களான டாக்டர் பதியுதீன் மஃமூத், டாக்டர் கலீல், பாக்கீர் மரிக்கார், A.C.S.ஹமீத் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார். மாறி மாறி ஆட்சி பீடமேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் அங்கத்துவம் வகித்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இனத்திற்காகக் குரல் கொடுக்க முடியாத ஒரு நிலை நிலவிவந்தது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் 1988ன் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உதயம் முஸ்லிம்களுக்கு ஒரு தனித்துவக் கட்சியாக மாறியதுடன். முஸ்லிம்களினதும், அடக்கி ஒடுக்கப்பட்ட சகல மக்களினதும் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் ஒரு வித்தியாசமான கட்சியாக மாறியது. அரசியல் வானில் இக்கட்சி ஒரு சிறிய கட்சியாக இருந்தாலும், பல பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியதோடு. சிறுபான்மையினங்களையும் மதித்து நடக்கும் ஒரு அரசியல் பின்னணியை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தோடு இணைந்து கொண்டிருந்தாலும், அதே அரசு நெறி தவறிப் போகும் போது அதைக் கண்டித்து திசை திருப்பும் ஒரு புதிய அரசியல் போக்கை இக்கட்சி கடைப்பிடிப்பது அரசியலில் ஒரு திருப்பு முனையாகவே அமைகிறது. தேசிய ரீதியாக இக்கட்சியைத் தாபித்த அல்-ஹாஜ் **M. H. M. Ashraff** அவர்களின் நேர்மையான தலைமைத்துவத்தாலும் அபார ஆற்றலாலும் இன்று ஆட்சியையே அமைக்கும் அளவுக்கு சக்தி கொண்டு விளங்குவது எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகம் அடைய வேண்டிய இலக்கைச் சரியாகத் தெளிவு படுத்தியுள்ளது.

இன்றைய முஸ்லிம்கள் நாடளாவிய ரீதியில் சிதறுண்ட ஒரு சமூகமாகக் காணப்படுவதாலும் இவர்களிடையே ஒரு சரியான தலைமைத்துவம் இன்றி பிளவு பட்டிருந்த நிலையையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மாற்றியமைத்துவிடுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றும் பிளவு பட்டுக் காணப்படும் முஸ்லிம்கள், இன்று ஒரே கொடியின் கீழ் இணையும் ஒரு ஆரோக்கியமான போக்கைக் காண முடிகிறது. இன்று இலங்கை வரலாற்றில் எப்போதுமே இல்லாதவாறு இன அடிப்படையில் சிந்திக்கும் மனப்பாங்கு எதிர்காலத்தில் முஸ்லிம்களிடையே பல பாரிய விளைவுகளை எதிர் கொள்ளச் செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை.

வர்த்தக சமூகமாக ஒரு காலத்தில் விளங்கிய முஸ்லிம்கள், இன்று தன் வர்த்தக நடவடிக்கைகளையும் எல்லாம் இழந்து வாழ வழியற்றவர்களாகக் காணப்படும் ஒரு நிலை நிலவுகிறது. முன்னர் இருந்தது போல் மாணிக்க வியாபாரிகளை எமது சமூகத்தால் கண்டுகொள்ள முடியவில்லை. பெரும் ஏற்றிறக்குமதியாளர்களை இன்று காணக்கிடைப்பதில்லை. பாரிய தொழில் முயற்சிகளில் முஸ்லிம்கள் ஈடுபடுவதாக விளங்கவில்லை. எனவே, வர்த்தகர்களாக இலங்கை வந்த முஸ்லிம்கள் தன் செல்வத்தாலும், பாரிய பொருளியல் அழுத்தத்தினாலும் அரசாங்கங்களையே ஆட்டிப் படைத்தாலும், இன்று எல்லாவற்றையும் இழந்து ஒரு கவலைக்கிடமான நிலையில் சமூகம் இருப்பதை கண்கூடாகக் காணலாம்.

இவற்றிலிருந்து தப்பி பெரும் முதலீடுகளில் ஈடுபட வேண்டிய அவசியம் எதிர்கால முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் சவாலாகத் தெரிகின்றது. திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் போக்கும், கைத்தொழில் மயமாக்கப்பட்ட முதலீட்டு அமைப்புக்களிலும் முஸ்லிம்கள் வெளியே தள்ளப்பட்ட ஒரு நிலையில் இன்றைய தேசிய கொள்கைகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுவதால், முஸ்லிம்கள் விழிப்பாக புது நூற்றாண்டை அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலில் போலவே முஸ்லிம்களைத் திட்டமிட்டு அரசியலிலும் ஓரங்கட்டும் சதி நடவடிக்கைகள் காலாகாலம் பேரினவாதக் கட்சிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களின் ஆதரவு தமக்கு தேவையில்லை என்ற போக்கில் பேரினவாதக் கட்சிகள் இரண்டுமே நடந்து கொண்டுள்ளதை வரலாற்றில் அறிய முடிகிறது. எனவே முஸ்லிம்கள் எதிர்காலத்தில் வேறுபாடுகளை மறந்து தேசிய ரீதியாக ஒரே தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் சில விஷமத்தனமான நச்சுக்கருத்துக்களைப் பரப்பும் குறுகிய நோக்கைக் கொண்ட அரசியல் வாதிகளும், அமைப்புக்களும் தோன்றி இன அடிப்படையில் மக்களை சிந்திக்கத் தூண்டச் செய்வதினால் சில பாரிய விளைவுகள் ஏற்பட இடமுண்டு. முஸ்லிம்களின் பொருளாதாரப் பலத்தைக் குறைத்து வர்த்தக முயற்சிகளைக் கிள்ளி எறிந்து நாசகர வேலைகளில் ஈடுபடும் சில இயக்கங்கள் பெரும்பான்மை மக்களிடையே தோன்றியுள்ளது ஒரு அபாய அறிவிப்பாகவே உள்ளது. பொஸ்னியாவைப் போன்று முஸ்லிம்களைக் கருவறுக்கும் பாங்கில் சில முயற்சிகள் நாளாந்தம் நடந்து கொண்டிருப்பதை நாம் அலட்சியமாக்கிக் கொள்ளக் கூடாது.

ஏற்கனவே கல்வியில் பின்தங்கியுள்ள முஸ்லிம் சமூகம் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளிலும், கைத்தொழில் துறைகளிலும் கூடுதலான பங்களிப்புச் செய்தல் அவசியமாகும். கல்வியில் முன்னேற்றம் காண்பதால் மட்டும் ஒரு சமூகம் முன்னேறுவதில்லை. கல்வியும் ஒழுக்கமும் கைகோர்த்துச் செல்லும் போதுதான் அச்சமூகம் செழிப்படைகிறது என்பதை வரலாற்றில் காணமுடிகிறது. எனவே எமது சிறார்கள் தொட்டு முதியவர்கள் வரை நல்லொழுக்கமுடையவர்களாகத் திகழ வேண்டிய அவசியம் உள்ளது.

எமது சமூகத்தில் சரிபாதிக்கும் கூடுதலாக பெண்மணிகளே காணப்படுகிறார்கள். தாயின் மடியில் வளரும்போதே குழந்தைகள் நல்ல பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும் கற்றுக் கொள்ளமுடிகிறது. எனவே சமூகத்தில் பெண்கள் பெருமதிப்புக் கொண்டவர்களாக மதிக்கப்பட்டு தாய்க்குலத்திற்குத் தேவையான மரியாதையும் அளிக்கப்படல் வேண்டும். பெண்களைத் தனியாகத் திரிய விடாது அவர்கள் பெண்களுக்குரிய விதத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு வழிமுறை நடளாவிய ரீதியில் பெண்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. பெண்களை எதிர்காலத்தில் கல்வித் துறையில் பெரும் முன்னேற்றம் காணச் செய்வதுடன், அவர்களின் தனித்துவமான ஆளுமையை வளர்க்க வேண்டிய ஒரு பாரிய பொறுப்பு எங்களைச் சார்ந்துள்ளது.

இறுதியாக அரசியல், பொருளியல், சமூக ரீதியாக என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஒரு வரையறைக்குள் செயல்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. குர்ஆன் - ஹதீஸ் என்ற அடிப்படைகளை வைத்தே எமது சகல விடயங்களையுமே மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே சமூகத்தில் ஆண், பெண்களிடையே சரியான இஸ்லாமியக் கருத்துக்கள் உரிய முறையில் அவர்களைச் சென்றடையச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு இஸ்லாமிய இயக்கங்கள் தன் தனிப்பட்ட இலாபங்களை மனதில் கொள்ளாது, ஒன்றுபட்டு தஃவா பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையாக ஈடுபடாவிட்டால், சமூகத்திதால் மென்மேலும் பல ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புண்டு.

முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் பாடுபடும் சமூகத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஆத்மீகத் துறையில் நல்ல பயிற்சி பெற்ற தேர்ச்சியுடையவர்களாக விளங்கினால்தான் சரியான தலைமைத்துவம் ஏற்படவும் மக்களால் மதிக்கப்படவும் காரணமாக அமையும். ஆத்மீக, லௌகீகத் துறைகளில் பரந்த அறிவும், ஆற்றலும், அனுபவமும் இருக்க வேண்டிய கட்டாய நிலை காணப்படுகிறது.

இறுதியாக இந்த ஆய்வுக் கட்டுரையில் இடம் பெற்ற அரசியல், பொருளியல், சமூகம் சார்ந்த கருத்துக்கள் இங்கு முன்வைக்கப்பட்டாலும், எனது சிறிய அறிவிற்கும், அனுபவத்திற்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் எத்தனையோ விடயங்கள் சேர்க்கப்படும்போதே எதிர்கால முஸ்லிம்களின் வாழ்வு புதிய நூற்றாண்டில் வளம் பெற்று அமையும் எனலாம்.

## Hon. Al-Haj. M.B. Malhardeen; MDP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான நாதம்

தேசத்தின்
இரத்தக் கறைகள்
இலங்கையில் எல்லாத்
திசைகளிலும்......
மனித உரிமைக்காக
ஊணமாகும் உடல்கள்
உயிரற்ற சடலங்களாக......

ஐக்கியம்
அதன் அர்த்தத்தைத் தேடுகிறது
பரிதாபம்...... அங்காடி
வியாபாரியிடம்
விடைகண்டு
விரக்தியின் விளிம்பிற்கே
வந்துவிட்டது

முன்னணிகளே!
உங்களிடம் ஒரு
வேண்டுகோள்......
பிணமாகும் அந்த மனித
உயிர்களை
பாதுகாக்க முன்னே வாருங்கள்
முதுபெரும் உங்கள்
கோட்பாட்டைச் சற்று
களையுங்கள்

தேசியத்திற்காக, ஐக்கியத்திற்காக
முன்னணியோடு இணையுங்கள்
சமாதானச் சின்னமொன்று உங்கள்
வாசல் கதவைத் தட்டுவதைப்
பாருங்கள்
அந்த
வெண்புறாவின் பாதையில் வந்து
சேருங்கள்
விடியலற்ற வானத்தில் ஒரு
விடிவெள்ளி....... ஆம்
விடியலைக் காணும்
பாக்கியத்தை நாம்
பாருக்கெல்லாம்
பகிரங்கப்படுத்தப் போகிறோம்

கிழக்கினில் உதித்த
அந்தத் தாரகையின் ஒளியினூடே
ஒரு தலைமைத்துவம் தெரிகிறதே
சனநாயகம், சோசலிசம்
எல்லாம் இணைந்த ஒரு
இணையற்ற தலைமைத்துவம்
இதோ.......
நாலா திசைகளிலும்
சமாதான நாதம் .......

எம்.எச்.எம். நியாஸ்
சமுர்த்தி இணைப்பதிகாரி,
சமுர்த்தி, இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சமாதான பூமி



இந்த சாந்தி இல்லம் பல தியாகங்களுக்கு மத்தியில் வெறும் கற்களும், மண்ணும், சீமெந்தும் கொண்டும் கட்டப்பட்ட கட்டிடம் அல்ல. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிப் போராளிகளின் இரத்தமும் வியர்வையும் சிந்திக் கட்டப்பட்டது. அவர்கள் இப்போது உயிருடன் இல்லாவிட்டாலும், நாம் அவர்களை இவ்விடத்தில் நினைவு கூருகின்றோம். இந்த சாந்தி இல்லத்தில் இருந்துதான் சமாதான பூமியை நோக்கிச் செல்லலாம். தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் சிந்தனையும், மன உறுதியும், விடா முயற்சியும் இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வர வேண்டும். அச்சமாதானம் சாந்தி இல்லத்தின் வழியாக சகல இன மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதுமாகும்.

சாந்தி இல்லத்தில் மத பேதமோ, குல பேதமோ, வர்க்க பேதமோ கிடையாது. சகோதரத்துவ வாழ்க்கை ஏற்படுததுவதற்கு மனிதனின் உ_டுகளும் உதடுகளும் பேசினால் மட்டும் ச_மாதானத்தை ஏற்படுத்த முடியாது. உள்ளங்களும் உள்ளங்களும் பேசினால் தான் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

இந்த தாறூஸ்ஸலாம் இலங்கையில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லாத ஒரு கட்டிடத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு இறைவன் தந்துள்ளான் அல்ஹம்துலில்லாஹ். இந்நாட்டில் மதங்களுக்கு இடையிலான பிரச்சினை, இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளை அகற்றி தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் என்ற வேறுபாடுகளை மறந்து கைகோர்த்து சமாதானத்தை அடையவேண்டுமென்றால் சாந்தி இல்லத்தில் இருந்து புனித சமாதான பூமியை நோக்கி நாம் அனைவரும் புறப்படுவோம். இந்த சாந்தி இல்லம் எமது நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என அனைத்து உள்ளங்களுடன் நானும் சேர்ந்து பிரார்த்திக்கின்றேன்.

**Hon. M.I. Haroon; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Towards Peace....

23 - 10 - 1998, the day in which the seven storied House of Peace - Darussalam was ceremonially declared open was the occasion in which the chains tied around the hands of the minorities were smashed to pieces.

The honour of declaring to the world that the Muslim minorities are no longer subservient to others goes to Hon. Al-Haj M. H. M. Ashraff, National President of the Sri Lanka Muslim Congress, Founder of the National Unity Alliance and H.E. President of the Dharussalam Model Parliament.

This House of Peace built with the blood and sweat of sacrifice is today one year old.

This country years for peace lost during the last two decades.

Peace, equality and brotherhood are living realties in Dharussalam. This House spreads its wings towards the younger generation in its endeavour to establish peace. The dove of peace awaits to flutter it wings when the young minds meet at this House of Peace.

With the help of God, our eyes will soon witness the dawn of this day. A permanent solution will be brought to the aspirations of all those who have lost lives, limbs and properties.

Let every Sri Lankan marching along the path of peace, remove all obstacles and witness the dawn of peace.

**Long Live Sri Lanka!**
**Long Live Peace!**
**Eradicate Communalism!**

## Hon. M.R.M. Jismy (Rafi); MDP

**Translated from Tamil by Mr. S.H.M. Jameel**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது தாருஸ்ஸலாம் பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது, **Hon. M.T. Hasan Ali** அவர்கள் சபைக்குத் தலைமை தாங்குவதையும், செயலாளர் நாயகம் **Mr. A.M. Abdul Azeez** மற்றும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் முன்னாள் தாருஸ்ஸலாம் பாராளுமன்ற உறுப்பினர் **Hon. M.H.M. Ashroff** அவர்கள் உரையாற்றிக் கொண்டிருப்பதையும் இப்படங்கள் காட்டுகிறது.

*படவுதவி : முஸ்தாக் முகம்மட்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தியின் உறைவிடம்



சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உன்னைத் தேடித்தான்
அகில உலகமே ஓடிக்கொண்டிருக்கிறது
நீ, இருக்கும் இடத்தை விட்டு இல்லாத
இடமெல்லாம் தேடுகிறார்கள் - சாந்தியைத் தேடி

ஏழை தேடுவதும் சாந்தி!
பணமுடையான் தேடுவதும் சாந்தி!
நெஞ்சில் கவலையுடையான் தேடுவதும் சாந்தி!
ஏழை அழுகிறான் கவலை குறைகிறது
பணமுடையான் பணத்தை வீசுகிறான் இன்பம் இனிக்கிறது
கவலையை மறக்கக் குடிக்கிறான்
பாவம்! எல்லோருமே சாந்தி பெறவில்லை

மனிதப் புனிதர்கள் காட்டிய சாந்தி!
வாழ்க்கை வளம் பெற பேணட்டும் சாந்தி!
அந்த சாந்தி இதோ இங்கே
என்னிடம் இருக்கிறது வாருங்கள் உள்ளே!
அழைக்கிறது கரம் நீட்டி! நுழைந்திடுவீர்
அந்த சாந்தி இல்லத்தினுள்ளே!
பெற்றிடுவீர் சாந்தி. இனி கவலை இல்லை
ஆம் தாருஸ்ஸலாம் அதுவே சாந்தியின் உறைவிடம்

**Hon. A.L.M. Ashroff; MDP**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் பாராளுமன்றம் அழுகிறது

நின்று அழவேண்டும் - போல்
இருக்கிறது இச்சமூகத்தின்
முன்னால்
வீதி எல்லாம் கேட்ட
துப்பாக்கியின் சத்தம் தான்
உங்கள் வீட்டின் முற்றத்திலும்
கேட்டது
ஏன் அதில் மட்டும்
அலி உதுமானின் உயிர்
அடங்கிப் போனது

ஒரு சமூகத்தின் விடுதலைக்காய்
முஸ்லிம் காங்கிரஸ் என்னும்
பாதையால் புறப்பட்டுப் போன
அலி உதுமானுக்கு
இன்று 10 வருடங்கள்
நினைவு வைபவம்
தாருஸ்ஸலாம் மாதிரிப்
பாராளுமன்றத்தில்

வீட்டிற்குள் இருந்த மாதர்
துப்பாக்கியின் சத்தம் கேட்டு
முற்றத்து வெளிக்கு
பார்க்கச் சென்ற
அலி உதுமானை
விதியின் வாசல் அணைத்துக்
கொண்டது

உயிருடன் வெளியேறிய
கணவரை உயிரற்ற
உடலாகத்தான்
அவர் மனைவி
ஹுசைறா கண்டாள்

ஞாபகம் வருகிறது
உயிரற்ற உடலும்
வீதியில் ஓடிய இரத்தங்களும்
எனக்கு
இப்போதுதான்
ஞாபகம் வருகிறது

சிறார்கள் எல்லாம்
ஆங்கிலம்
பேசுகையில்
அலி உதுமான் சேர் என்று
மக்கள் மகிழ்ச்சியுடன்
அழைத்த நாட்களும்
எனக்கு ஞாபகம்
வருகிறது இப்போதுதான்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில்
அகப்பட்டுப் போன
மாகாண சபையால் - 1988களில்
வடக்கு கிழக்கு மாகாண
சபையால்
முஸ்லிம் காங்கிரஸ்
பிரதிநிதியாய்
மக்களின் சேவகனாய்
கடமை புரிந்த காலமோ
அது!

எதுவுமறியா பச்சை
மரத்திற்கு உங்கள்
இரத்தத்தைத்தான்
முதலில் மரத்திற்கு
பாய்ச்சினார்கள்
ஒரு துப்பாக்கி குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது மரத்திற்கு
உங்களின் இரத்தமும்
தலைவர் அஷ்ர.்.பின்
கண்ணீரும்தான்
முதலில் பாய்சினார்கள்
அதனால்தான் இன்று
கனிபறிக்கிறது
இந்நாட்டு மக்களுக்கு

எம்.எச்.எம். அஷ்ர.்.ப் எனும்
தலைவரின் பின்னால்
ஒன்றுபட்ட மக்கள் கூட்டம்
அணி திரண்டு செல்கையில்
ஏன் அலி உதுமானை மட்டும்
அடக்கம் செய்தீர்கள்

யா அல்லாஹ்
உன்னை நேசித்தவர்களாக
அரசியல் பாதையில் புறப்பட்ட
அலி உதுமானையும்
ஏனைய போராளிகளையும்
எம் உறுப்பினர்களின்
துவாக்களினால்
பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை
வழங்குவாயாக!
ஆமீன்

1989-08-01 ஆந் திகதி அக்கரைப்பற்று மண்ணில் உயிர்நீத்த மர்ஹூம் அலி உதுமான் அவர்களின் பத்தாண்டு கதமுல் குர்ஆன் வைபவத்தில் **Mr. M.H. Musthak Mohamed** அவர்களால் எமது பாராளுமன்றத்தின் சார்பில் இக்கவிதை எழுதிச் சமர்ப்பிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ගොඩනගමින් පවතින අපේ ආදර්ශ පාර්ලිමේන්තුවේ සැකැස්ම

தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எமது பாராளுமன்ற அமைப்பு

The Layout of our Model Parliament under construction




Designed & Printed By:
**Appolo Graphics - 445551**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org